


30 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 30 | பாலம்: 20 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | OCTOBER 15, 2020

# கனடிய பசுமைக் கட்சி சரித்திரம் படைத்தது!

கனடிய மத்திய அரசிற்கான தேர்தலில் பங்குபற்றும் நான்கு பிரதான கட்சிகளில் ஒன்றான பசுமைக் கட்சி தனது தலைவராக ஒரு கறுப்பினத்தவரைத் தெரிவு செய்ததன் மூலம் கனடிய அரசியலில் சரித்திரம் படைத்துள்ளது.

2020 ஒக்ரோபர் 3இல் நடைபெற்ற கனடிய பசுமைக் கட்சியின் தலைவருக்கான தேர்தலில் 47 வயதான ரொறொன்ரோ சட்டத்தரணியான அனாமி போல் (Annamie Paul) தெரிவு செய்யப்பட்டார். இவரே கனடிய மத்திய அரசில் பங்குபெறும் ஒரு பிரதான கட்சி தமது தலைவராகத் தெரிவுசெய்த முதலாவது கறுப்பு இனத்தவர் ஆவார். அத்துடன் இவர்தான் பிரதான கட்சி ஒன்றிற்குத் தலைமை வகிக்கும் முதலாவது கறுப்பினப் பெண்மணியும் ஆவார்.

அனாமி போலின் தெரிவின் மூலம் கனடிய மத்திய அரசில் பங்குபெறும் பிரதான கட்சிகள் ஒரு சிறுபான்மை இனத்தவரை இரண்டாவது முறை கட்சியின் தலைவராகத் தெரிவு செய்துள்ளது. அனாமி போல் பிரதான கட்சி ஒன்றுக்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட இரண்டாவது யூத இனத்தவரும் முதலாவது யூத இனப் பெண்மணியும் ஆவார்.

கனடிய மத்திய அரசில் பங்குபெறும் கட்சிகளில் நீண்ட காலமாகத் தலைமைப் பதவி வகித்த பெண் எனச் சரித்திரம் படைத்த எலிசபெத் மே (Elizabeth May) 2019 நொவெம்பர் 4ஆம் திகதி கனடிய பசுமைக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து தான் விலகுவதாகக் கூறினார். அவர் தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தான் இருப்பதுடன் அடுத்துவரும் பொதுத் தேர்தலிலும் பசுமைக் கட்சியின் சார்பில் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குப் போட்டியிடுவேன் என்றார்.

2006ஆம் ஆண்டிலிருந்து 13 வருடங்களாகப் பசுமைக் கட்சியின் தலைமைப் பதவியை வகித்து வந்த எலிசபெத் மே நொவெம்பர் 4ஆம் திகதி கட்சித் தலைமைப் பதவியில் இருந்து விலகும்போது Jo-Ann Robertsஐக் கட்சியின் தற்காலிகத் தலைவராக நியமித்தார். எலிசபெத் மே கனடிய நாடாளுமன்ற உறுப்பினராக 2011இல்



Annamie Paul

நடைபெற்ற பொதுத் தேர்தலில் தெரிவானார். கனடிய நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பசுமைக் கட்சி உறுப்பினர் எலிசபெத் மே ஆவார். கனடிய நாடாளுமன்றத்தில் தற்போது மூன்று பசுமைக் கட்சி உறுப்பினர்கள் உள்ளனர்.

எலிசபெத் மே தலைமைப் பதவியில் இருந்து விலகியதால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப எட்டுப்பேர் போட்டியிட்டனர். பசுமைக் கட்சியில் தற்போது 35,000 உறுப்பினர் இருக்கின்றனர். பசுமைக் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்ட எட்டுப்பேரில் நால்வர் பெண்கள். தேர்தலில் போட்டியிட்ட அனுபவம் இவர்களில் ஐவருக்கே இருந்தது.

**Meryam Haddad:** சிரியாவிலிருந்து கனடாவிற்கு ஐந்து வயதில் வந்தவர். தற்போது குடிவரவுச் சட்டத்தரணியாக மொன்றியலில் வாழ்பவர். 32 வயதான இவர் தான் ஒரு லெஸ்பியன் (lesbian) எனக் கூறுவதுடன் கனடியப் பொலிஸ் சேவையை முற்றாக மாற்றி அமைக்க வேண்டும் என வாதாடுபவர்.

**Courtney Howard:** 41 வயதான இவர் ஒரு அவசரகால சேவை வைத்தியராக Yellowknifeஇல் பணியாற்றுகிறார். கல்ஹறி பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறையில் பேராசிரியராகவும் இருக்கிறார். 100% தூய சக்திப் பாவனையை வலியுறுத்தும் இவர், அரசாங்கம் எல்லோருக்கும் குறைந்தபட்ச வருமானத்துக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருபவர்.

**Amita Kuttner:** பிரிட்டிஷ் கொலம்பியாவை சேர்ந்த 29 வயதான இவர் கலிபோர்ணியாப் பல்கலைக்கழகத்தில் வானியற்பியலில் (Astrophysics) முனைவர் பட்டம் பெற்றவர். மாணவர்களின் மேற்படிப்புக்கான கட்டணத்தை இல்லாமல் செய்ய வேண்டுமெனவும் எல்லோருக்கும் வைத்திய மருந்துச் சீட்டிற்கான மருந்துகள் (Prescription Drugs) மற்றும் பல் மருத்துவ வசதி இலவசமாக்கப்பட வேண்டும் எனவும் போராடி வருபவர்.

**Dimitri Lascaris:** இவர் இலண்டன் ஒன்ராறியோவில் பிறந்து மொன்றியலில் வாழ்ந்துவரும் 56 வயது சட்டத்தரணி. கனடிய தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச சம்பளம் மணித்தியாலத்திற்கு $20 ஆக இருக்க வேண்டும் என வாதாடி வருபவர்.

**David Merner:** இவர் பிரிட்டிஷ் கொலம்பியாவைச் சேர்ந்த 58 வயது இளைப்பாறிய சட்டத்தரணி. மாணவர்களுக்கு மேற்படிப்பு இலவசமாகக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் எனவும் எல்லோருக்கும் வைத்திய மருந்துச் சீட்டிற்கான மருந்துகள் இலவசமாக வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி வருபவர்.

**Glen Murray:** மனிரோபாவைச் சேர்ந்த 62 வயது அரசியல்வாதியான இவர் ஒன்ராரியோ சட்டசபையில் லிபரல் கட்சியின் ஆட்சிக் காலத்தில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சராக இருந்தவர். பூச்சியக் கழிவு,

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)


























# இந்தியாவின் தலைநகர் டெல்லியின் வரலாறும் அதன் சிறப்புகளும்


செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715

இதிகாச காலத்திலிருந்து இந்தியாவின் சக்திவாய்ந்த பேரரசர்களால் ஆளப்பட்ட ஒரு வலுவான வரலாற்றுப் பின்னணியுடன் மகாபாரத காலந்தொட்டு இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ பேரரசுகளின் ஆட்சி பீடமாக டெல்லி விளங்கியது.

டெல்லியின் வரலாறு, ஆறாம் நூற்றாண்டு வரை சரியான ஆதாரங்களுடன் தெளிவாக எழுதப்படவில்லை. இருப்பினும் ஆறாம் நூற்றாண்டுவரை, புராணங்களின் படி இளவரசி காந்தாரின் விருப்பத்தின்படி ராஜா த்ரித்ராஷ்டர் தனது இராச்சியத்தை இரண்டாகப் பிரிக்க ஒப்புக்கொண்டு, நல்ல செழிப்பாக உள்ள ஹஸ்தினாபூரை (மீரட் -உத்தரபிரதேசம்) தனக்கும் துரியோதன னுக்கும் தக்க வைத்துக்கொண்டு, பாம்புகள் அதிகம் வாழும் வறண்ட பகுதி யான காண்டவப்பிரஸ்தாவை (டெல்லியின் ஒரு பகுதி) பஞ்சபாண்டவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. பாண்டவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் ஓர் அற்புதமான கோட்டையை உருவாக்கி அதை இந்திர பிரஸ்தா என்று அழைத்தனர். மேலும் மௌரிய வம்சத்தின் நிறுவனர் சந்திர குப்த மௌரியர் பின்னர் அவரை தொடர்ந்து வந்த சாம்ராட் அசோகரும் டெல்லியை தனது ராஜ்யத்தின் ஒரு முக்கிய நகரமாக வைத்து ஆட்சி செய்துள்ளனர்.




இதன் பின்னர், ஏழாவது நூற்றாண்டு முதல் - பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை (736-1192) டெல்லி நகரத்தின் ஆட்சி ஒரு ஆட்சியாளரிடமிருந்து இன்னொரு ஆட்சி யாளருக்கு மாறிக்கொண்டு பலமுறை அழிந்து மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளது. டெல்லியை ஆட்சி செய்த முக்கியமான பேரரசர்கள்- தோமர், சௌகான் மற்றும் ரஜபுத்திர வம்சவழியைச் சார்ந்த இந்து ராஜாக்கள். 1192ஆம் ஆண்டு, ஆப் கானிஸ்தானில் இருந்து படைஎடுத்து வந்த முகமது-பின்-கோரியினால் டெல்லி யின் கடைசி இந்து ராஜா பிருத்விராஜ் சௌவான் தோற்கடிக்கப்பட்டு சுல்த்தான் வம்சத்தினரின் ஆட்சியை (இஸ்லாமிய பேரரசு) கைபற்றினர். இந்த வெற்றியை அடையாளம் காட்டும் வகையில், இந்தியாவின் முதல் சுல்த்தான் என்று அழைக்கப்படும் குதுப்-உத்-தீன்-ஐபாக், உலகத்திலே மிகவும் உயரமான கல் கோபுரமான குதுப்மினாரின் கட்டிடப் பணியை தொடங்கினார். சுல்த்தான் வம்சத்தினரின் ஆட்சி கிட்டத்தட்ட 334 ஆண்டுகள் நடைபெற்றன (1192-1526). இந்த காலகட்டத்தில் ஆட்சி செய்த சக்திவாய்ந்த இஸ்லாமிய பேரரசர்கள் - குதுப்-உத்-தீன், இல்த்துமிஷ், அலாவூதீன் கில்ஜி, பிரோஷா துக்ளக், முஹமது-பின்-துக்ளக், சிக்கந்தர் லோடி மற்றும் இப்ராஹிம் லோடி.




1526ஆம் ஆண்டு, மங்கோல் நாட்டில் இருந்து படை எடுத்துவந்த பாபருக்கும் டெல்லியின் ராஜா இப்ராஹிம் லோடிக்கும் நடந்த முதலாம் பானிபட் சண்டையில் லோடியை கொன்று பாபர் டெல்லியைக் கைப்பற்றி வடஇந்தியாவில் முகலாயப் பேரரசை நிறுவினார். பாபருக்குப் பின்னர் டெல்லியை ஆட்சி செய்த முக்கியமான முகலாய பேரரசர்கள் யாரெனில் - பாபர், ஹுமாயூன், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கசீப் மற்றும் பகதூர்ஷா.

ஐந்தாவது முகலாய பேரரசரான ஷாஜஹான் ஆட்சிக்காலம் (1628-1658) முகலாய கட்டிடக்கலையின் பொற்கால மாக விளங்கியது. ஷாஜஹான் தனது நான்காவது மனைவி மும்தாஜின் நினைவாக உருவாக்கிய தாஜ்மஹால், டெல்லி-செங்கோட்டை மற்றும் யமுனை ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஷாஜகானாபாத் (பழைய டெல்லி) மிகவும் பிரபலமானதாகும். முகலாயர்களின் சகாப்தம் நீண்ட மற்றும் புகழ்பெற்ற காலமாக இருந்தது (1526-1857). ஆனால் அதேநேரத்தில், முகலாய மன்னர்களில் பலர் மது மற்றும் மாதுவுக்கு அடிமையாகி உல்லாசமாக நேரத்தை செலவிடத் தொடங்கினர். இதன் காரணமாக முகலாய சாம்ராஜ்யம் வீழ்ச்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தபோது, 1857ஆம் ஆண்டு கிழக்கிந்திய கம்பெனி (பிரிட்டிஷ்) தனது படை பலத்தினால் முகலாய பேரரசர் பகதூர்ஷாவை கைது செய்து பர்மாவுக்கு

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

# கனடிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

காபன் நடுநிலைப் பொருளாதாரம் போன்றவற்றிற்காகத் தீவிரமாக வாதாடி வருகிறார்.

**Annamie Paul:** மேலே கூறப்பட்ட ஏழு பேருடனும் போட்டியிட்டு தலைவர் பதவியை வென்றவர். இவர் ஒட்டாவா பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை பட்டதாரி. அமெரிக்காவில் Princeton பல்கலைக் கழகத்தில் பொது நிர்வாகத் துறையில் முதுகலை பட்டம் பெற்றவர். 2019ஆம் ஆண்டு நடைபெற்ற மத்திய அரசிற்கான




**Andrew West:** இவர் ஒட்டாவாவில் வாழும் 45 வயதான ஒரு சட்டத்தரணி. சுற்றுப்புறச்சூழல் சம்மந்தப்பட்ட சட்டத் துறையில் ஒட்டாவா பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். சுற்றுப்புறச் சூழல் சம்மந்தப்பட்ட விடயங்களில் ஓரளவு நடுநிலையைப் பேணுபவர். அரசு வரவு செலவுத் திட்டத்தில் விரைவில் சம நிலையைப் பேண முயற்சிக்க வேண்டும் எனத் தீவிரமாக வாதாடி வருபவர்.

பொதுத் தேர்தலில் ரொறொன்ரோ மத்தி தேர்தல் தொகுதியில் பசுமைக் கட்சியின் சார்பில் போட்டியிட்டவர்.

அத்தேர்தலில் லிபரல் கட்சியைச் சேர்ந்த Bill Morneau 57% வாக்குகளைப் பெற்று வெற்றி பெற அனாமி போல் 7%ஆன வாக்குகளைப் பெற்று நான்காம் இடத்துக்கு வந்தவர். அங்கு புதிய ஜனநாயகக் கட்சி 22% வாக்குகளையும், பழமைவாதக் கட்சி 12% வாக்குகளையும் பெற்றிருந்தது.

Luxury 2 Bedroom Condo for Sale McCowan/401




Luxury 2 Bedroom, sunny south/west corner condo near McCowan/401. Spacious with open concept overlooking the park. Hardwood floors, Kitchen breakfast bar and 5 appliances. Good size bedrooms with big windows all over. Amenities include 24 hrs concierge, indoor swimming pool, exercise room, sauna, party rm, guest suite, table tennis, library and more. Convenient location to Centennial college, U of T, TTC, 401 & Scarborough Town Centre.

For more information Please call
Rama Bahri Sales Representative
Homelife/GTA RealtyInc.,Brokerage.
416-565-2596.

அனாமி போல் மனித உரிமை சட்டத் தரணியாக ரொறொன்ரோவில் பணியாற்று கிறார். மாணவர்களுக்கு மேற்படிப்பு இலவசமாகக் கிடைக்க வேண்டும், மாணவர்கள் மேற்படிப்பிற்குப் பெறப்பட்ட கடன் சுமையை இரத்துச் செய்ய வேண்டும், எல்லோருக்கும் குறைந்தபட்ச வருமானத்தை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும், எல்லோருக்கும் வைத்திய மருந்துச் சீட்டிற்கான மருந்து கள் மற்றும் பல மருத்துவ வசதிகள் இலவசமாகக் கிடைக்க வேண்டும் என்று தீவிரமாக வாதாடி வருகிறார். அத்துடன் காபன் வாயுக்களின் உமிழ்வுக் குறைப்பு இலக்குகளை ஒப்புக்கொண்டு அவற்றைப் பூர்த்தி செய்கின்ற புதைபடிவ எரிபொருள் (fossil fuels) உற்பத்தி செய்வோருக்கு அரசு நிதி உதவி வழங்க வேண்டும் எனவும் தெரிவித்து வருகிறார்.

அனாமி போல் ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ் மற்றும் கற்லன் (catalan) ஆகிய நான்கு மொழிகளில் சரளமாகப் பேச, எழுத, வாசிக்கத் தெரிந்தவர். அனாமியின் தாயார் Nevis நாட்டைச் சேர்ந்தவர். இது கரீபியன் கடலில் இருக்கும் ஒரு தீவு. அவரது தகப்பனார் Dominica நாட்டில் இருந்து கனடாவிற்குப் புலம் பெயர்ந்தவர். அனாமி மனித உரிமைச் சட்டத்தரணியான Mark Freeman என்பவரைத் திருமணம் செய்து கடந்த 24 ஆண்டுகளாகக் குடும்ப வாழ்வில் இருக்கின்றார். இவர்கள் இருவருக்கும் இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர். அனாமி தனது கணவருடைய யூத மதத்தில் 2000ஆம் ஆண்டில் சேர்ந்தார்.

ஒக்ரோபர் 03இல் நடைபெற்ற பசுமைக் கட்சிக்கான தலைவர் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியான 34,705 உறுப்பினர்களில் 23,877 (68.8%) பேர் வாக்களித்திருந்தனர். வாக்குச் சீட்டில் எட்டு வேட்பாளர்களுடைய பெயருடன் NOTA (None of the above) என்பது ஒன்பதாவது தெரிவாக இருந்தது. அதாவது மேற்படி 8 பேருக்கும் வாக்களிக்க விரும்பாவிடில் ஒருவர் NOTA இற்கு வாக்களிக்கலாம். இம்முறை நடைபெற்ற தலைவர் தெரிவில் 36 பேர் NOTA இற்கு வாக்களித்திருந்தனர். அத்துடன் பசுமைக் கட்சியின் தலைவர் தெரிவும் தரவரிசை வாக்குப்பதிவு முறையாகும். அதாவது ஒருவர் தனக்கு விரும்பிய ஒழுங்கில் 1,2,3,.. என வாக்குச் சீட்டில் தமது தலைவருக்கான தெரிவை எழுதலாம். இம்முறை வாக்கு எண்ணிக்கைக்கு எடுக்க முடியாமல் போன செல்லுபடியற்ற வாக்குகளின் எண்ணிக்கை 1,706 ஆகும்.

மீதமுள்ள வாக்குகளில் 50% இற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறுபவரே தலைவராகத் தெரிவு செய்யப்படுவார். ஒரு வேட்பாளர் 50%இற்கும் மேற்பட்ட வாக்கு கள் பெறும் வரையும் ஆகக் குறைந்த வாக்குகள் பெற்றவரின் பெயர் நீக்கப்பட்டு அவருக்கு விழுந்த வாக்குகளில் உள்ள அடுத்த விருப்பமானவர் தெரிவிக்கு அவ்வாக்குகள் அளிக்கப்பட்டு மீண்டும் எண்ணப்படும்.

பசுமைக் கட்சியின் தலைவர் தெரிவில் ஒருவரும் 50% இற்கு மேற்பட்ட வாக்கு கள் பெறாதபடியால் ஆகக்குறைந்த வாக்குகளைப் பெற்றவரின் பெயரை நீக்குவதன் மூலம் எட்டு முறை திரும்பத் திரும்ப எண்ணப்பட்டது. இறுதிச்சுற்று எண்ணிக்கையின் போது Annamie Paul உம் Dimitri Lascaris மட்டுமே இருந்தனர். இவர்களில் Annamie Paul 12,090 (54.53%) வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

பசுமைக் கட்சித் தலைவர் தெரிவுக்கு முன்னர் ஊடகங்கள் இம்முறை கொள்கை அடிப்படையில் யார் தலைமைப் பதவிக்கு வருவார் என்று ஆருடம் கூறுவது கடினம், ஆனால் தேர்தல் பிரசார காலத்தில் அதிகளவு கட்சி உறுப்பினர்களையும் பணத்தையும் கட்சிக்குச் சேர்த்தவர் என்ற நிலையில் அனாமி போல் தான் முன்னிலையில் நின்றதால் அவர்தான் வெற்றி பெறுவார் எனத் தெரிவித்திருந்தன.



தேர்தல் பிரசார காலத்தில் அதிகூடிய பணமாக $206,000ஐ அனாமி போல் கட்சிக்குச் சேர்த்திருந்தார். அவருக்கு அடுத்ததாக Dimitri Lascaris $147,000 ஐ கட்சிக்குச் சேர்த்திருந்தார்.

தலைவர் தேர்தலில் வெற்றிபெற்ற அனாமி போல் தான் தனது சொந்தத் தொகுதி யான ரொறொன்ரோ மத்தி தொகுதியில் 2020 ஒக்ரோபர் 26இல் நடைபெற இருக்கும் கனடிய மத்திய அரசிற்கான இடைத்தேர்தலில் போட்டியிடுவதாகத் தெரிவித்தார். WE தொண்டு நிறுவனம் தொடர்பான விசாரணையின் போது தனது பதவியைத் துறந்த நிதியமைச்சர் Bill Morneau ரொறொன்ரோ மத்தி தொகுதி யைச் சேர்ந்தவர். இங்கு ஒக்ரோபர் 26 இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

பசுமைக் கட்சியின் முன்னாள் தலைவி எலிசபெத் மே தனது கட்சி, புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் Jagmeet Singh ஐ நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்ய வசதியாக அவருக்கு எதிராக ஒரு பசுமை கட்சியின் வேட்பாளரை நியமிக்க வில்லை. அதை அந்நேரம் Jagmeet Singh வரவேற்றிருந்தார். தற்போது பசுமைக் கட்சியின் புதிய தலைவரான அனாமி போல் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாக வசதி செய்து கொடுப்பதற்காகப் புதிய ஜனநாயகக் கட்சி தனது வேட்பாளரை ரொறொன்ரோ மத்தி தொகுதியில் நிற்பாட்டாது விட வேண்டுமெனக் கேட்டார்.

இதற்குப் பதில் அளித்த புதிய

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்...)

# நாமும் நமது இல்லமும் 569

# செப்ரெம்பர் 2020 – ஆதன வியாபாரமும் விலையேற்றமும்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கோவிட்-19இன் பாதிப்பில் மக்கள் அல்லலுறும் இந்தக் காலத்தில் ஒவ்வொரு மாதமும் ஆதன விலை அதிகரித்தே வருகிறது. ரொறொன்ரோ பெரும்பாக ஆதன சபையும் (Toronto Regional Real Estate Board -TRREB) தமது அறிக்கையில் இவ்வாறான விலை அதிகரிப்பையே தெரிவித்துள்ளது. 2019 செப்ரெம்பரில் விற்பனையான (Sold) (7,791) ஆதனங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது, 2020 செப்ரெம்பரில் விற்பனையான (11,083) ஆதனங்களின் எண்ணிக்கை 42.3% அதிகமாகும்.

2019 செப்ரெம்பரில் விற்பனைக்கு வந்த (Listed) (15,616) ஆதனங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது, 2020 செப்ரெம்பரில் விற்பனைக்கு வந்த (20,420) ஆதனங்களின் எண்ணிக்கை 30.8% அதிகமாகும்.
2019 செப்ரெம்பரில் விற்பனையான ஆதனங்களின் சராசரி விலையுடன் (Average Price) ($842,421) ஒப்பிடும்போது, 2020 செப்ரெம்பரில் விற்பனையான ஆதனங்களின் சராசரி விலை ($960,772) 14.0% அதிகமாகும்.

ரொறொன்ரோவில் மட்டுமல்லாமல் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் இவ் வியாபார அதிகரிப்பைக் காணக் கூடியதாக உள்ளது.

**September 2020**
**Best month in Real Estate Industry in GTA**

| | Sept. 2019 | Sept. 2020 | Changes |
|---|---|---|---|
| #of Sales | 7,791 | 11,083 | +42.3% |
| #of Listings | 15,616 | 20,420 | +30.8% |
| Avg. Price | $842,42 | $960,772 | +14.0% |


தனி வீடுகளிலும் இரு சேர்ந்த வீடுகளிலும் ஏற்பட்ட விலை அதிகரிப்பே சராசரி விலை அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும்.

ஒரு வீடு வாங்குவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாங்குவோர் போட்டியிடுவதும், மிகக் குறைந்த அடமானக் கடன் வட்டி வீதமும் (கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் 0.25%), ஐந்து வருடத்திற்குரிய மாதாந்த வட்டி வீதமும் 2.0% ஆகியவை முக்கிய காரணமாகும். கடந்த 2019 செப்ரெம்பருடன் ஒப்பிடும்போது இந்த வருடம் அதிக ஆதன உரிமையாளர்கள் தமது ஆதனங்களைச் சந்தைப்படுத்தியதும், அதிக விற்பனைக்குக் காரணமாகலாம்.

ரொறொன்ரோவைச் சுற்றியுள்ள பகுதிகளில் குறிப்பாக கிழக்கு மற்றும் வடக்குப் பகுதியில் விலை அதிகரிப்பு அதிகமாகக் காணப்பட்டது. ரொறொன்ரோவின் மத்தியில் அடுக்கு மனைகளின் வியாபாரம் மந்தமாகவும், இலகுவாக வாடகைக்குப் பெறக்கூடியதாகவும் உள்ளது. அதிகமான அலுவலகத் தொழிலாளர்கள் வீட்டிலிருந்தே தமது தொழில்களைப் புரிவதும் பல்கலைக்கழக மாணவர்கள் தமது வீடுகளுக்கும் நாடுகளுக்கும் திரும்பியதும் காரணமாகும்.

covid-19 தொடங்கிய காலத்திலிருந்து ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் வாடகையின் பெறுமதி 20% அளவில் இறங்கியுள்ளது. இதனால் அடுக்குமனை விற்பனையிலும் இலகுத்தன்மையைக் காணக்கூடியதாக உள்ளது. இருந்தும் ரொறொன்ரோ நகரத்தில் அடுக்கு மனையின் விலை கடந்த செப்ரெம்பருடன் ஒப்பிடும்போது 7% அதிகரித்து $686,191 ஆகக் காணப்படுகிறது. இந்தக் காலப்பகுதியில் தொடர் வீடுகளின் விலை 22%ஆலும், இருசேர் வீடுகள் 49%ஆலும், மற்றும் தனி வீடுகள் 28%ஆலும் அதிகரித்துள்ளது. முக்கியமாக ரொறொன்ரோவுக்கு வெளிப்பகுதியில் தனி வீடுகளின் வியாபாரம் 64%இனால் அதிகரித்துள்ளது. இருப்பினும் Canada Mortgage and Housing Corporation (CMHC) புதிய வருடத்தில் (2021) ஆதனவிலை 9% தொடக்கம் 18% வரை குறையலாம் எனத் தெரிவித்துள்ளது. கோவிட்-19இன் இரண்டாவது அலை வீசத் தொடங்கிய இக்காலத்தில் என்ன நடக்கும் என்பது சிறிது காலத்திற்குப் பின்பே தெரியவரும்.




## நாம் குடியிருக்கும் ஆதனத்தின் விலை அதிகரிப்பிற்கும் வரி செலுத்தவேண்டி வரலாம்?

கோவிட்-19இன் பாதிப்பால் கனடிய அரசு தமது மக்களுக்கு சகல வழிமுறைகளிலும் உதவி செய்து வருவது அறிந்ததே. மக்களுக்கு உதவி செய்யும் பணத்தை எதிர்காலத்தில் பெறுவதற்கு ஏதாவது புதிய முறைகளில் வரிகளைக் கொண்டு வர அரசு சிந்திக்கலாம்.

சில வழிமுறைகளில் இவையும் அடங்கலாம்.

இன்றைய காலத்தில் எனது மனதில் எழுவது: நாம் இருக்கும் வீட்டின் விலை அதிகரிப்பிற்கு வரி செலுத்துவது.

இப்பொழுதுள்ள நடைமுறையில்,

1. நாம் குடியிருக்கும் வீட்டினை விற்கும்பொழுது விலை அதிகரிப்பிற்கு வருமானவரி செலுத்தத் தேவையில்லை, எனினும் முதலீடு (investement property) செய்யும் ஆதனத்தின் விலை அதிகரிப்பின் 50%இற்கு மட்டுமே வருமானவரி செலுத்த வேண்டும்.

2. பணம் படைத்தவர்களுக்குரிய வரி. (Wealthy Tax) - ஒரு குறிப்பிட்ட விலைக்கு மேலாக விற்கப்படும் ஆதனத்தின், விலையின் ஒரு பகுதிக்கு மட்டும் வரி செலுத்துதல்.

3. ஏற்கனவே குடியிருக்கும் வீட்டை விற்கும்போது (resale) GST செலுத்த வேண்டி வரலாம் அல்லது ஒரு குறிப்பிட்ட விலைக்கு மேலாக விற்கப்படும் தொகைக்கு மட்டும் GST கொடுப்பனவு செய்ய வேண்டி வரலாம். இப்பொழுது நடைமுறையில் ஏற்கனவே குடியிருக்கும் (resale) ஆதனங்களிற்கு GST செலுத்தத் தேவையில்லை. புதிதாக நிர்மாணம் செய்யும் ஆதனத்திற்கு மட்டும் GST வரி செலுத்த வேண்டும். குறிப்பிட்ட விதிவிலக்கும் உண்டு.

**மனிதன்**

பணத்தை சம்பாதிக்க ஆரோக்கியத்தை தியாகம் செய்கிறான்.
இழந்த ஆரோக்கியத்தை சம்பாதிக்கப் பணத்தை தியாகம் செய்கிறான்.



# இலங்கையைத் தாக்கும் இரண்டாவது அலை!

**- விகிர்தன் -**

கொரோனா வைரஸ் உலகின் பல நாடுகளில் பரவி தொடர்ந்து பாதிப்புக்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் நிலையில், இந்த வைரஸ் தொற்றை தொடக்க நிலையிலேயே வெற்றிகரமாகக் கட்டுப்படுத்திய நாடாக இலங்கை திகழ்ந்தது. இப்போது மீண்டும் கொரோனா அலை அடிக்கத் தொடங்கியுள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்றாகி விட்டது.

கொரோனா வைரஸ் தொற்று வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களினாலேயே இலங்கைக்குப் பரவ ஆரம்பித்தது. சமூக மட்டத்தில் அது பரவத் தொடங்கியதுமே இலங்கை அரசாங்கம் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தி விட்டது.

ஒரு பக்கத்தில் விமான நிலைங்களில் கடுமையான கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. வெளியார் இலங்கை வருவது பூரணமாகத் தடை செய்யப்பட்டது. வெளிநாடுகளிலிருந்த இலங்கையர் நாடு திரும்புவதற்கு மட்டுமே விமான நிலையம் பயன்படுத்தப்பட்டது. அவ்வாறு வருவோருக்கு விமான நிலையத்தில் வைத்துப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அவர்கள் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு 14 நாட்கள் தங்கவைக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தொற்று அடையாளம் காணப்பட்டோர் அனைவரும் கொரோனா சிறப்பு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் சிகிச்சையில் குணமானதும் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். நாள் தோறும் நோயில் இருந்து குணமாகி வெளியேறுவோரின் விபரங்கள் அரச தரப்பிலிருந்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி இலங்கையில் மேற்கொள்ளப்படும் சிகிச்சை முறைகள் கூட ஏனைய நாடுகளையும் விட காத்திரமானதாகவே அமைந்துள்ளது என்று கூறலாம். இதுவரை 13 பேர் மட்டுமே இந்த நோயினால் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது பல நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று மேலும் பரவி பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது. இதனை கொரோனாவின் இரண்டாவது அலை என்று கூறுகின்றனர். இந்த இரண்டாவது அலை முன்னரை விடவும் வீரியமாகத் தாக்கி வருவதாகவும் கூறப்படுகின்றது. இந்த இரண்டாம் அலை இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்கின்ற எச்சரிக்கை சுகாதார அமைச்சினால் அவ்வப்போது விடுக்கப்பட்டு வந்துள்ளது. ஏனெனில், மக்கள் சிறிது சிறிதாகத் தங்கள் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை தளர்த்திக் கொண்டு வரத்தொடங்கினர். இதனால் தொடர்ந்தும் மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

இந்த சந்தர்ப்பத்தில்தான் தென்னிலங்கையில்- கம்பஹா மாவட்டத்தில் உள்ள மினுவங்கொடையில் அமைந்திருக்கும் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிய 39 வயது பெண்ணொருவர் கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டார். பின்னர் அவர் பணியாற்றிய தொழிற்சாலையில் உள்ள ஏனையோருக்கும் தொற்று பரவியுள்ளமை பரிசோதனைகளில் கண்டறியப்பட்டது. தொடர்ந்து அவரது மகளான 16 வயது மாணவிக்கும் தொற்று ஏற்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. தொழிற்சாலை மூடப்பட்டு பணியாளர்கள் அனைவரும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். மாணவி கல்வி பயின்ற பாடசாலையும் மூடப்பட்டது. மாணவர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர். தொடர்ந்து கம்பஹா மாவட்டத்தின் பல பகுதிகள் முடக்கப்பட்டன. ஊரடங்கு உத்தரவு கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

குறித்த ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றியோர் மூலமாக- அவர்கள் பயணம் செய்த பஸ்கள், வாகனங்களில் பயணித்தோரைக் கண்டறியும் நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. ஆனால், இதனை உடனடியாகவோ அல்லது முழுமையாகவோ கண்டறிவது மிகவும் சிரமமான பணி. இதன் காரணமாக கம்பஹாவை கடந்தும் பல மாவட்டங்களில் கொரோனா தொற்றாளர்கள் கண்டறியப்பட்டு வருகின்றனர்.

கொழும்பிலுள்ள மேலும் சில ஆடைத் தொழிற்சாலைகளின் பணியாளார்களுக்கும் தொற்று பரவியுள்ளது. உதாரணமாக கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலையத்தில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலைகளுக்குள்ளும் தொற்று பரவியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலையத்தில் உள்ள தொழிற்சாலைகள் மூன்றில், கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அத்தொழிற்சாலைகளும் உடனடியாக மூடப்பட்டன.

சுதந்திர வர்த்தக வலையத்தில் உள்ள 87 தொழிற்சாலைகளில், 36 ஆயிரம் ஊழியர்கள் பணிபுரிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இத்தொழிற்சாலைகள் அனைத்தும் மூடப்பட்டால் பாரிய பொருளாதார சிக்கல் ஏற்படுவதோடு, அவற்றின் ஊழியர்களின் வாழ்வாதாரமும் கடுமையாகப் பாதிக்கப்படும். அதேவேளை, இத்தொழிற்சாலைகளுக்குத் தற்போது 8 ஆயிரம் ஊழியர்களே பணிக்கு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஏனையோர் கம்பஹா பகுதிகளிலிருந்து வருவோர். அங்கு பல பிரதேசங்களுக்கு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதால், அங்கிருந்து ஊழியர்கள் செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.



குறித்த கம்பஹா மினுவங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்த யாழ்ப்பாணம் புங்குடுதீவை சேர்ந்த இரு பெண்கள் யாழ்ப்பாணம் வந்த நிலையில் வடக்கில் யாழ்ப்பாணத்திற்கும் இந்த ஆபத்து பரவியுள்ளது. அவர்களுடன் தொடர்புடைய 20 பேர் உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டனர். பின்னர் அவர்களுடன் தொடர்புகொண்ட கிளிநொச்சியைச் சேர்ந்தவர்களின் இரண்டு குடும்பங்களும், அக்குடும்பங்களுடன் தொடர்புகொண்ட இரு குடும்பங்களுமாக நான்கு குடும்பங்கள் சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டன.

அனலைதீவு மற்றும் காரைநகர் பகுதிகளும் முடக்கநிலைக்கு உட்படுத்தப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை நீக்கப்பட்டது. அனலைதீவு பகுதியில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டிருந்த இரண்டு பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் அடிப்படையில் அவர்களுக்கு தொற்று இல்லை என்பது சுகாதாரப் பிரிவினரால் உறுதி செய்யப்பட்டதையடுத்து முடக்க நிலை நீக்கப்பட்டது.

மன்னாரிலும் சில தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ள நிலையில் பட்டித்தோட்டம் மற்றும் பெரியகடை ஆகிய கிராமங்கள் முடக்கப்பட்டு அங்குள்ள மக்கள் பரிசோனைக்கு உட்ப்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்திலும் தொற்றுப் பரவல் அடையாளம் காணப்பட்டுள்ளது. அங்கும் பல பகுதிகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறாக, தொற்றாளர் அடையாளம் காணப்படுவதும், தொடர்ந்து அவர்களுடன் தொடரப்கொண்டோரைத் தேடிக் கண்டுபிடிப்பதும், அவர்கள் பயணம் செய்த வாகனங்கள், அவர்கள் நடமாடிய இடங்கள், பொருள் கொள்வனவு செய்யப்பட்ட கடைகள் என அனைத்து இடங்களையும் கண்டறிந்து பின்னர் அவர்களுடன் தொடர்பிலிருந்தோரை தேடிப் பிடிப்பது என்பதெல்லாம் மிகவும் சிக்கலான அதேவேளை முழுமையாக நடைமுறைப்படுத்த இயலாத காரியமாகும்.

இந்த நிலையில் நாளுக்கு நாள் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே உள்ளது. ஒரே நாளில் நூற்றுக்கும் அதிகமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

இந்தப் பத்தியை நான் எழுதிக் கொண்டிருக்கும் 13ஆம் திகதி இரவு 12 மணி வரையிலான நேரத்தில் மினுவங்கொடை ஆடைத் தொழிற்சாலை மூலமாகப் பரவிய கொத்தணியில் பதிவான மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 1,591ஆக பதிவாகியுள்ளது. நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 5,038 ஆக பதிவாகியுள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் தாக்கம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில்,

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# ஊடகவியலாளர்களை இலக்கு வைக்கும் சமூக விரோதிகள்!




இன்று நாட்டில் பாதுகாப்பிற்குப் பொறுப்பாக இருப்பவர்களையும் விடவும் ஊடகவியலாளர்களைக் கண்டு அச்சப்படும் நிலையில் சமுகவிரோதிகள் உள்ளனர். குற்றச் செயல்களை தொழிலாகவே செய்துவருகின்ற நபர்கள் தங்கள் பிரதான எதிரிகளாக ஊடகவியலாளர்களைப் பார்க்கின்றனர்.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு செய்தியாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு, முறிப்பு என்ற பகுதியில் சட்ட விரோதமாக மரங்கள் வெட்டப்பட்டு கடத்தப்படும் நடவடிக்கைகள் நீண்ட காலமாக நடைபெற்று வருகின்றன. இதற்குரிய தரப்பினர்களால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத காரணத்தினால் அப்பகுதி மக்கள் அங்குள்ள ஊடகவியலாளர்களிடம் இதனைத் தெரிவித்துள்ளனர்.

உண்மையில் அப்பகுதியில் என்ன நடக்கின்றது எனப் பார்ப்பதற்காக முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து செயற்படும் இரண்டு செய்தியாளர்கள் சென்றுள்ளனர். அப்போது கடத்தல் கும்பலை சேர்ந்தோர் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். அந்த மரக் கடத்தல் கும்பலுக்குப் பொறுப்பாகவிருக்கும் நபர் இரு செய்தியாளர்களையும் தனது இடத்திற்கு இழுத்துச் சென்று அங்கு வைத்தும் தாக்கியுள்ளார்.

வாள் முனையில் அவர்களை அச்சுறுத்தி அவர்கள் இருவரும் தனது காணிக்குள் அடாத்தாக நுழைந்ததாகக் கூறும்படி அவர்களிடம் குரல் பதிவுகளைப் பெற்றுள்ளனர். ஆனாலும், அவர்களுக்கு ஆபத்து ஏற்படாமல் அவர்களை பொதுமக்களே பாதுகாத்திருக்கின்றனர்.

அப்பகுதி மக்கள் சிலருடைய ஒத்துழைப்புடன் தப்பிவந்த ஊடகவியலாளர்கள் அருகிலிருந்த இராணுவ முகாமில் விடயத்தைக் கூறியுள்ளனர். இதையடுத்து, பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. ஊடகவியலாளர்கள் இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்த மரக்கடத்தல்காரன் மீது ஏற்கனவே நீதிமன்றில் பல வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் ஊடகவியலாளர்கள் அணிந்திருந்த தங்க ஆபரணங்கள் மற்றும் பணம் என்பவை கடத்தல்காரர்களால் பறிக்கப்பட்டுள்ளன. ஊடகவியலாளர்களின் புகைப்படக் கருவி மற்றும் தொலைபேசி ஆகியவற்றிலிருந்து எடுக்கப்பட்ட படங்களும் அவர்களால் அழிக்கப்பட்டுள்ளன.



இந்த சம்பவம் தொடர்பில் வடக்கில் மட்டுமல்லாது கிழக்கு மாகாணம் மற்றும், இலங்கையிலுள்ள ஏனைய பகுதிகளிலுள்ள ஊடக அமைப்புக்களும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றன. நீண்ட காலமாகவே இலங்கையில் பல ஊடகவியலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். போர் நடைபெற்ற காலங்களில் வடக்கு, கிழக்கில் மட்டுமல்லாது தென்னிலங்கையிலும் ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டும், கொல்லப்பட்டும், காணாமலாக்கப்பட்டும் உள்ளனர். இதற்கான தீர்வுகள் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை.

போர் முடிவடைந்ததன் பின்னர்கூட ஊடகவியலாளர்கள் குறிவைக்கப்பட்டனர். குறிப்பாக தமிழ் பிரதேசங்களில் உள்ள ஊடகவியலாளர்கள் பல சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். இப்போது சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் சில குழுக்கள் ஊடகவியலாளர்களால் தங்களுக்குப் பிரச்சினை என்பதால் அவர்களை குறிவைக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த இரு ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்ட தகவல்கள் சமூக வலைத்தளங்களில் உடனடியாக வெளியானது. சிலர் இது தொடர்பில் தங்களது கருத்துக்களை தெரிவித்தபோது பொலிஸ் செய்ய வேண்டிய வேலையை ஏன் இந்த ஊடகவியலாளர்கள் செய்தனர் என்ற கேள்வியை எழுப்பியிருந்தனர்.

உண்மையில் பொலிஸ் செய்ய முடியாத அல்லது அவர்கள் செய்யத் தவறியதையே இந்த ஊடகவியலாளர்கள் செய்துள்ளனர். நாடு முழுவதும் குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றன. தமிழ் பிரதேசங்களிலும் அவை தமிழர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. வட மாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் வாள் வெட்டு வன்முறையில் ஈடுபட்டு வருகின்ற குழுக்களை இன்னமும் முழுவதுமாகக் கட்டுப்படுத்த இயலாத நிலை உள்ளது.

அவர்கள் கைது செய்யப்படுகின்ற போதும் எப்படியோ வெளியில் வந்து விடுகின்றனர். சிறையில் அடைக்கப்படுவோர் தங்கள் குற்றச் செயல்களை மேலும் விரிவு படுத்தவும், கட்டமைக்கவும் சிறைச்சாலைக்குள்ளேயே ஆட்களைத் தேடிக்கொள்கின்றனர். குற்றச் செயல்களில் தொடர்புடையவர்கள் தப்பிக் கொள்ளவும் அவர்களின் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடரவும் பாதுகாப்பிற்குப் பொறுப்பானவர்களே காரணம் என்று பொதுமக்கள் மத்தியில் அபிப்பிராயம் உள்ளது.

தற்போது அரசாங்கம் அவ்வாறானோரைக் கைது செய்து வருகின்றமை இதனை நிரூபிக்கின்றது. போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் 13 அதிகாரிகள் அண்மையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்பை பேணியதாகத் தெரிவிக்கப்பட்டு கைது செய்யப்பட்டவர்கள். இதுவொரு சிறு துளி நடவடிக்கை என்றே கூற வேண்டும். இன்னும் குற்றவாளிகளுடன் தொடர்புகளைப் பேணும் பாதுகாப்பு அதிகாரிகள் இருக்கின்றனர். இவர்களின் உதவிகளினாலேயே சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன.

பொலிஸார் பொதுமக்கள் மத்தியில் தொடர்புகளைப் பேணி நம்பிக்கைக்கு உரியவர்களாக மாறினால் நாட்டில் சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களை எளிதாகவே கட்டுப்படுத்தலாம். அவர்களை சட்டத்தின் முன்னிறுத்தி தண்டிக்கலாம். ஆனால், அந்த நிலை இன்னும் முழுவதுமாக ஏற்படுத்தப்படவில்லை. பொலிஸாருக்கு பொதுமக்களே குற்றச் செயல்கள் தொடர்பான தகவல்களை வழங்கினால் அதனை உடனடியாக ஒரு கட்டுப்பாட்டிற்குள் வர முடியும். குற்றவாளிகளுடன் பாதுகாப்பு தரப்பினரே தொடர்பில் இருந்தால் தகவல் தெரிவித்த பொதுக்கள் குறிவைக்கப்படும் ஆபத்து ஏற்படும். இதனால் பொதுமக்கள் மௌனம் காக்கின்றனர். இதன் காரணமாகவே நாட்டில் குற்றவாளிகள் தப்பித்துக்கொள்ளும் நிலைமை உள்ளது.

குறிப்பாக, வாகன போக்குவரத்து தொடர்பில் விதிமுறைகளை மீறுவோருக்கு கடுமையான அபராதங்கள் விதிக்கப்படும் நடைமுறை அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மகிழ்ச்சியடைவோர் பொதுமக்கள் அல்ல. வீதிப் போக்குவரத்திற்குப் பொறுப்பாகவுள்ள பொலிஸாரே மகிழ்ச்சியடைகின்றனர். ஒரு சிறு தவறு ஏற்பட்டாலும் வாகனங்களை மறித்து இந்தத் தவறுக்கு நீதிமன்றம் சென்றால் இவ்வளவு தொகை செலுத்த வேண்டியிருக்கும் என்ன செய்யப் போகின்றீர்கள்? என்று கேட்கின்றனர். சரி நீதிமன்றில் இருபதாயிரம் தண்டம் என்று அறிவிக்கப்பட்டால் ஒரு ஐயாயிரத்தை சம்பந்தப்பட்ட பொலிஸாருக்குக் கையூட்டாக வழங்கிவிட்டுப் போய்விடலாம் என்கின்ற நிலையில்தான் தவறிழைப்போர் உள்ளனர்.

இதனையும் விட, சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் செல்பவர்கள், மரக் கடத்தலில் ஈடுபடுகின்றவர்களிடமிருந்து பெருந் தொகைக் கையீட்டு வழங்கப்படுகின்றது. இதனைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இன்று தொழில் நுட்ப வளர்ச்சி அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறான தவறுகளை செய்யும் அதிகாரிகளை கண்டறியும் பொறிமுறைகளை உருவாக்க வேண்டும்.


பொதுமக்களுடனான உறவை பலப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பு தரப்பினர் குற்றங்களை எளிதில் தடுக்க முடியும்.

முல்லைத்தீவில், ஊடகவியலாளர்களான க.குமணன் மற்றும் ச.தவசீலன் ஆகியோரை மூர்க்கமாகத் தாக்கிய மரக் கடத்தல்காரர்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதலை மேற்கொண்ட கும்பலின் பிரதான நபர் உள்ளிட்ட இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் ஊடகவியலாளர்களிடம் இருந்து அபகரிக்கப்பட்ட ஊடகச் சாதனங்கள், பணம் உள்ளிட்டவற்றை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில், 2ஆவது சந்தேக நபரின் மனைவியும் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

07ஆம் பக்கம்...)

World Class Realty Point Brokerage
Affordable Homes ♦ Pre-Construction Condos
Investment Properties
Search Here - Find Here
HousePrice.ca
www.HOUSEPRICE.ca
Right Realtor Right Price
Sam Surendran
Sales Representative
Dir: 647.350.0220
World Class Realty Point Brokerage
55 Lebovic Ave, #C115, Toronto, ON M1L 0H2. Tel: 416.444.7653

# வறுமையை ஒழிப்போம்



யதுசனா சவுந்தரராசா
அகவை 18

கொடுமையானது வறுமை. அதனிலும் கொடிது இளமையில் வறுமை. தற்போது பசி, பட்டினி, பஞ்சம் போன்றவற்றுக்குக் குறைவில்லாத காலமாகக் காணப்படுகிறது. இன்று நேற்றல்ல மன்னர் ஆட்சிக் காலம், மானிய முறைக்காலத்திலிருந்து இன்றைய ஜனநாயகக் காலம்வரை வறியோர் என்று ஒரு சாரார் இருந்த வண்ணமே உள்ளனர். உள்நாட்டுப்போர், நாடுகளிடையிலான போர்கள், தொற்று நோய்ப்பரவல், இயற்கை அனர்த்தங்கள் போன்றன வறுமை என்னும் சிறைக்குள் மக்களை ஈர்த்துக் கொள்ளுகின்றன. ஒவ்வொரு தனிமனிதனனும் பொருளாதார நிலையை சிதறடித்து அடிப்படைத் தேவைக்கும் கையேந்தும் நிலைக்குத் தள்ளுகின்றன.

பசி வந்தால் பத்தும் பறந்து விடும் என்பர். சில ஆபிரிக்க நாடுகளில் நீண்ட காலமாக நடைபெறும் உள்நாட்டு யுத்தம் காரணமாக அங்குள்ள சிறார்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்கின்றனர். போசாக்கு ஏதுமின்றி நோயாளிகளாக வலுவிழந்தவர்களாக ஆக்கப்படுகின்றனர். அதனால் பலர் தமது உயிரையும் இழக்கும் சூழ்நிலையில் உள்ளனர். இதற்கும் மேலாக இன்று உலகையே ஆட்டிப்படைக்கும் கொரோனா தொற்றால் எண்ணிக்கை வரையறையின்றி மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பாதிப்பின் உக்கிர நிலையில் தொழில் வாய்ப்புகளையும் இழந்து தடுமாறுகின்றனர் வறுமையின் பிடியில் சிக்கிய மனிதர். இதனால் தற்போதைய நிலையானது ஏழை மக்களின் துயரத்தை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் அதிகரித்துள்ளது. இருந்தும் அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டர் அமைப்புக்கள், நலனோம்பு நிறுவனங்கள் போன்றன சர்வதேச மட்டத்திலும் உள்நாட்டு மட்டத்திலும் இந்த வறுமையை இல்லாதொழிக்க எவ்வளவோ முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றன. அதிலும் புலம்பெயர் உறவுகள் தங்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களைப் பொருட்படுத்தாமல் தாயக உறவுகளை பசி பட்டினியுடன் விடக்கூடாது என்பதற்காக சரியான நேரத்தில் உதவிக்கரம் கொடுத்து வறிய குடும்பங்களைக் கை தூக்கிவிட்ட சம்பவம் இப்போதும் எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது.



அதுபோன்று எமது நாட்டைப் பொறுத்த வரையும் இங்கும் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ளவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை வழங்க முனைகின்றனர். எமது மக்களைப் பொறுத்தவரை நீண்டகால யுத்தத்தினால், அதன் தாக்கத்தால் குடும்பத் தலைவனை இழந்து எத்தனையோ பெண்கள் குடும்பத்தின் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்றுள்ளனர். இந்நிலையில் குடும்பத்தின் பொருளாதார தேவையை அப்பெண்களை ஏற்க வேண்டி இருப்பதால் அவர்களின் குடும்பத்தில் பழமையானது அழையா விருந்தாளியாகக் குடியேறுகிறது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் உழைப்பு, அதனால் கிடைக்கும் வருமானம் அன்றாடம் அவர்களின் வாழ்க்கைச் செலவை சமாளிப்பதற்குத் திண்டாடும் நிலையில் காணப்படுகிறது. ஊதியம் பெறும் நாளில் தன்நிறைவாக இருக்கும் நிலையும் மாதக் கடைசிவரை தேவைகளுக்குப் பணத்தை பகிர்ந்தளிப்பதில் தடுமாறுவதும் ஏழ்மையில் வாழும் மக்களின் நாளாந்த நிலையாகும்.

வறுமையை ஒழிப்பதாயின் வறிய மக்களின் தேவைகள் சரியான முறையில் இனங்காணப்பட வேண்டும். அவற்றைப் பெற அவர்களை பொருளாதார ரீதியாகவும் அறிவூட்டல் ரீதியாகவும் வழிவகை செய்தல் வேண்டும். அதன்மூலம் அவர்களுக்கான வளமான எதிர்காலத்துக்கான வறுமையின் பிடியிலிருந்து மீட்க முடியும்.

உழைப்பு இருந்தும் அது போதியதாக இல்லாதிருப்பதால் ஏழ்மையில் இருப்போர் ஒரு சாரார் எனின் எந்த ஒரு வருமானமும் இல்லாமல் அடிப்படைத் தேவைகளுக்காகவும் கையேந்தும் நிலையில் வாழ்வோரும் இருக்கவே செய்கின்றனர். உடல் வலுவிழந்தோர் பொது இடங்களிலும் வழிபாட்டுத் தளங்களிலும் யாராவது அடுத்தவேளை வயிறு நிறைவதற்கு உதவ மாட்டார்களா என எதிர்பார்த்துக் காத்திருக்கும் யாசகர்கள் பிள்ளைகள் இருந்தும் அநாதைகளாக்கப்பட்ட பெற்றோர், தாய் தந்தையை இழந்த சிறுவர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் இயலாமையின் பிடியில் சிக்கித் தவிப்போரே.

எமது பிரதேசங்களில் சமூக பொருளாதாரத்தை நோக்குவோமானால் இங்கு நன்றாகக் கல்வி கற்று உயர் பதவிகளை வகிப்போர் முதல் படிப்பறிவற்று பாமரர்களாக வறுமையோடு மாரடிப்போர் வரை அனைத்து நிலையிலுள்ளோரும் காணப்படுகின்றனர். இவற்றில் அரச உத்தியோகம், பதவிகளை வகிப்போரை எடுத்துக் கொண்டால் இவர்களுடைய பொருளாதார கட்டமைப்பு ஓர் ஆரோக்கியமானதாகத் தன்னிறைவானதாக அடிப்படை வசதிகள் அனைத்தும் மேம்பட்டதாக இருக்கிறது. வறுமைக் கோட்டின்கீழ் உள்ள குடும்பங்களில் இன்றும் ஓட்டைக் குடிசையில் வாழும் நிலையும் அடுத்த வேளை சோற்றுக்கு ஏங்கும் நிலையும் காணப்படுகிறது. அரச அதிகாரிகளும் சேவைத் துறையில் இருப்போரும் இவர்களின் பக்கம் தமது பார்வையைத் திருப்ப வேண்டும். அடிப்படை வசதிகளையாவது பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மக்கள் சேவையை தலையாய கடமையாகக் கொண்டு சேவை புரியும்போது பொதுநலன் விரும்பும் நேர்மையான அதிகாரிகளுக்கு மத்தியில் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நம்பிக்கையுடன் செல்லும் பாமர மக்களின் கோரிக்கைகளை செவிசாய்க்க விரும்பாத அதிகாரிகளும் இருக்கவே செய்கின்றனர். உரிய தீர்வு பெற்றுக் கொடுக்காமையினால் மக்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர். இப்படி நிலைமை இருக்க எப்படி வறுமை தீரும். மக்களின் தேவைகள் கேட்டறியப்பட்டு உரியமுறையில் நிறவேற்ற வழிகளை செய்வதற்கு உரிய நிர்வாகத் துறையினர் முன்வரும்போது வறுமை எனும் நிலை மக்களை விட்டுத் தூர விலகிச் செல்லும்.

நான், எனது குடும்பம் பெற்றுக்கொள்ளும் வசதி வாய்ப்புக்களில் சிறு பகுதியாக அவர்களும் பெற்று வாழ வேண்டும் என உயர் நிலையில் நிர்வாகத்துறையிலிருப்போர் உணர்வார்களாயின் பசி-பட்டினி-பஞ்சம் போன்றன பஞ்சாய் பறந்து விடும்.

இது இவ்வாறிருக்க, தேர்தல் காலங்களில் ஒவ்வொரு வீட்டுப் படலையையும் தட்டி வாக்குகளை கேட்கின்றனர். ஒரு பகுதியினர் வெல்கின்றனர். ஒரு பகுதியினர் தோற்கின்றனர். தேர்தல் முடிந்ததும் வென்றவர்களும் இந்த மக்களைத் தேடி வருவதில்லை. தோற்றவர்களும் இந்த மக்களைத் தேடி வருவதில்லை. வாக்குறுதிகளும் பெயரளவிலேயே நிலைக்கின்றன.

மக்களின் பிரதிநிதியாக நாடாளுமன்றம் செல்வோர் வாக்குகளுக்காக மக்களை நாடாது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வருவார்களாயின் அடுத்த தேர்தலில் வீடுவீடாகச் சென்று வாக்குக் கேட்கவேண்டிய அவசியம் ஏற்படாது. மக்களே முன்வந்து வாக்களிப்பர். எம்மை வறுமை நிலையிலிருந்து மீட்ட இவர்கள் தொடர்ந்தும் மக்களுக்கு சேவை ஆற்றுவர் என்று நன்றியுடன் இவர்களை நினைவில் வைத்திருப்பர்.

வாழத் துடிக்கும் இளம் சமுதாயத்தின் தடைக்கல்லாக இடப்பட்ட வறுமைக் கோட்டைத் தாண்டி வசந்தம் வீசிடச் செய்ய யாவரும் முன்வருவோம்.

## உலக வறுமை ஒழிப்பு தினம்

ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் 17ஆம் திகதி உலக வறுமை ஒழிப்பு தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

1987ஆம் ஆண்டு, பிரான்சின் பாரிஸ் நகரில்தான், முதன் முதலாக வறுமை ஒழிப்புத் தினம் கடைப்பிடிக்கப்பட்டது. அதன்பிறகு உலக ரீதியில் வறுமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், பசிக்கொடுமையில் இருந்து மக்களை விடுவிப்பதற்காகவும், ஐக்கிய நாடுகள் சபை, 1992ஆம் ஆண்டு ஒக்ரோபர் 17ஆம் திகதியை வறுமை ஒழிப்பு நாளாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

ஒரு நாட்டின் அல்லது இடத்தின் அடிப்படை வாழ்க்கைத் தரத்துக்குக் கீழ் வாழும் மக்களை, ஏழ்மை நிலையில் அல்லது வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர் எனலாம். பொதுவாக ஒரு குறிப்பிட்ட அளவு வருமானத்தை வைத்தே ஏழ்மை நிலை அளவு மதிப்பிடப்படுகின்றது. முன்பெல்லாம் உண்ண உணவின்றி, பசி, பட்டினியால் வாடுவதுதான் வறுமை எனப்பட்டது. தற்போதைய நவீன யுகத்தில், வளர்ச்சியின் பரிமாணங்களில் மாற்றங்கள் ஏற்பட்டதால், வறுமை பற்றிய புரிதலும் மாறியுள்ளது. எனவே, பசியின்மையை மட்டும் வைத்து வறுமையை அளவிட முடியாது. உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பான குடிநீர், போதிய சுகாதார வசதிகள், ஊட்டச்சத்துகள், வருமானம், கல்வி போன்ற தனிமனிதனின் வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிப்பவற்றை இழந்த நிலைதான் வறுமை எனப்படுகிறது.

## இந்தியா...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

நாடு கடத்திவிட்டு முகலாய வம்சத்தை முற்றிலும் அழித்ததுடன் முகலாயர்களின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தனர். ஆரம்பகாலத்தில் கிழக்கிந்திய கம்பெனி கல்கத்தாவிலிருந்து டெல்லியை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்து இருந்தனர். பின்னர்1911ஆம் ஆண்டு வரலாற்று சிறப்புமிக்க டெல்லி தர்பாரில் பிரிட்டிஷ் பேரரசர் ஜார்ஜ் தலைநகரை கல்கத்தாவிலிருந்து டெல்லிக்கு மாற்றுவதாக அறிவித்ததுடன் டெல்லியை நவீனமயமாக்கும் பணிகள் தொடங்குவதற்கு ஆணையை பிறப்பித்தார்.

... டெல்லியின் வரலாறு தொடரும்

## ஊடகவியலாளர்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

இதேவேளை தாக்குதலை நால்வர் மேற்கொண்டதாக முறையிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மேலும் இருவர் தேடப்படுகின்றனர். இவர்கள் சட்டத்தின் முன்னிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். சமூக குற்றவாளிகளிடமிருந்து பொதுமக்களும் ஊடகவியலாளர்களும் பாதுகாக்கப்பட அரசாங்கம் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

# இணைந்திருங்கள்




## Better Together

நீங்கள் ஒரு சவாலை சந்திக்கத் தயாராக இருக்கிறீர்களா; உண்மையை சொல்லப் போனால் இது உங்களுக்கு மட்டுமான சவால் அல்ல. ஒட்டுமொத்த நம் சமூகத்துக்கானது. நம் அனைவரின் வளர்ச்சிக்கானது. அதாவது போட்டி போடுவதற்குப் போட்டி போட்டுப் பழகிக் கொண்டிருக்கும் நாம், நம் சமூகத்தோடு, ஒன்றுபட்டு உழைத்து, இணைந்து வெற்றி பெற்று, மகிழ்ச்சியோடு பகிர்ந்து வாழப் பழகிப் பார்க்கலாமா?

பெரும்பாலும் யாரோ ஒருவரை சீராட்டுவதற்கும் யாரோ சிலரோடு போராடுவதற்கும் மட்டுமே ஒன்று சேரப் பழகி இருக்கிறோம். வேற்றுமையில் ஒற்றுமை, ஒற்றுமை எனும் கயிற்றைப் பற்றிப் பிடியுங்கள். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு எனும் நல்மொழிகள் எல்லாம் இன்று பழ(மை) மொழிகளாகிக் கொண்டிருக்கின்றன.

சிறு குழந்தை, ஒன்று இரண்டு என்று எண்களை கற்றுக் கொள்ளத் தொடங்கும் போதே அங்கே 'நான்தான் முதலாவதாக வரவேண்டும்' என்ற போட்டியும் ஆரம்பமாகி, வேலை அலுவலகம் என்று அது விடாது தொடர்கிறது. பலநேரம், எல்லோரையும் தவிர்த்து விட்டு, எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு, நான்; நான் மட்டுமே, எனது... எனக்கு மட்டுமே என்று முண்டியடித்து முன்னேறுபவன் வெற்றி பெற்றவனாக முன் நிறுத்தப்பட, மற்றவர்கள் பின் தங்கிப் போனவர்களாக சித்தரிக்கப்படுகின்றனர், படிப்பில் மட்டுமல்ல சமூகத்திலும்.

சேர்ந்து உண்டு, சேர்ந்து பேசி, சேர்ந்து வேலை செய்து, சேர்ந்து கற்று, சேர்ந்து மகிழ்ந்த காலங்கள் எல்லாம் இந்த 'நான் தான் முதலாவதாக வரவேண்டும்' என்ற வேட்டையில் நசுங்கிக் கொண்டிருக்கிறது. சுய மரியாதை, சுய கௌரவம், சுய பச்சாதாபம், சுய பிரதானம் என ஒவ்வொரு சுயமும் அன்புமயமான இந்த உலகத்தை ஒவ்வொரு தனித் தீவுகளாகக் கூறு போட்டுப் பிரித்துக் கொண்டிருக்கிறது.

வெற்றி என்பது மகிழ்ச்சி என்றும், ஒருவனின் தோல்வி மற்றவனின் வெற்றி என்பதும் விளையாட்டின் விதிகளாக இருக்கலாம். வாழ்வின் விதி வேறு. அது உனக்கும் எனக்குமாகச் சேர்ந்து பகிர்ந்து உண்பதையே மகிழ்ச்சி என்கின்றது. விற்பவனின் இலாபம் வாங்குபவனின் ஆதாயம் எனும் win-win கொள்கையே வாழ்வின் உன்னதம், மகிழ்ச்சியின் மூலதனம்.

தென்னாபிரிக்காவில் கூட்டாகச் சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்த பழங்குடி சிறுவர்களைக் காணும் மேலைநாட்டுப் பயணி ஒருவருக்கு அவர்களை வைத்து வேறு ஒரு விளையாட்டு விளையாடத் தோன்றுகிறது. பழங்களையும் சொக்லேட்களையும் பிஸ்கட்களையும், ஒரு கூடையில் அடுக்கி தூரத்தில் வைத்துவிட்டு, அந்தக் சிறுவர்களை வரிசையாக நேர் கோட்டில் நிற்கச் செய்து உங்களில் யார் வேகமாக முந்திச் சென்று அந்தக் கூடையை நெருங்கி யார் முதலாவதாக வருகிறார்களோ அவர்களுக்கு அந்தக் கூடையும் அதில் உள்ள பொருட்களும் பரிசாக அளிக்கப்படும் என்கிறார்.

'Ready, Steady, Go' என்றவுடன் அதுவரை சேர்ந்து விளையாடிய அந்தச் சிறுவர்கள் ஒன்றை ஒன்று முட்டி மோதி வெற்றித் தளத்தை அடைய முயலும் என நினைத்தவருக்கு பெரும் ஏமாற்றம். அந்தச் சிறுவர்கள் அத்தனை பேரும் ஒருவர் கையை மற்றொருவர் பிடித்துக் கொண்டு சேர்ந்து சென்று, கூடையை நெருங்கிப் பொருட்களை எடுத்து ஒருவருக்கொருவர் பகிர்ந்து மகிழ்கின்றனர்.

எதிர்பாராத இந்தத் திருப்பத்தைக் கண்டு திகைத்த அந்தப் பயணி ஏன் இப்படி செய்தீர்கள் என்று கேட்டபோது அந்தச் சிறுவர்கள் கூட்டாகச் சொல்கின்றனர், வாழ்வில் நம்முடன் ஒன்றாகப் பயணிப்போர் தோற்று நம் முன் நிற்கத் தனி ஒருவன் மட்டும் தன் வெற்றியை எப்படிக் கொண்டாட முடியும்?, தன்னைச் சுற்றி இருப்போரைக் கவலையோடு தலை குனிய விட்டுவிட்டு தான் மட்டும் எப்படித் தலைநிமிர முடியும்?, நான் நானாக இருப்பதற்கு நான் மட்டும் காரணம் அல்ல. ஒருவன் இல்லாமல் மற்றவன் இல்லை. வெற்றி எல்லோருக்கும் பொதுவானது என்கின்றனர்.

இந்த இனிமையான மனித நேய பாடத்தை எங்கே கற்றனர் அந்தச் சிறுவர்கள். உண்மை என்னவென்றால் அந்தப் பண்புதான் மனிதனின் பிறப்பியல்பு. இயல்பை மீறிய சிந்தனைகளைத் தான் ஏதோ ஒரு தேடலின்போது இயல்பாக நம்மை தொற்றிக்கொள்ள விடுகிறோம். பெரும்பாலும் நாம் தனித்து நிற்க முயற்சி செய்யும், நம் வாழ்க்கைப் பயணத்தில் நம்மையுமறியாமல் நம் இனிய தனித் தன்மையை இழந்து கொண்டிருக்கிறோம். இருந்தும் மனிதம் நமக்குள் சுரந்து கொண்டிருக்கிறது.



மனிதமே மகிழ்ச்சி எனும் அந்த மந்திரத்திற்கு நம் மனதை தீர்க்கமாக உட்படுத்தவில்லையென்றால், அது பல தந்திரங்களை செய்து நம்மை எந்திரமாக்கிவிடும். போட்டிக்கு ஆள் இல்லையென்றால் நான் எப்படி வெற்றி மகுடம் சூட்டிக் கொள்வது என்று எதிரிகளை அது உருவாக்கி விடும். உன் நண்பன் யாரென்று சொல் நீ யாரென்று சொல்கிறேன் என்று கேட்டது போய் என் எதிரி யார் தெரியுமா என்று பறை சாற்றிக் கொள்வதில் கர்வம் கொள்ளச் செய்யும் மனம், நம்முடைய ஒவ்வொரு வெற்றிக்கும் நம்மோடு இணையும் கைகளை விட, நம்மை உசுப்பேற்றி உருவேறச் செய்யும் எதிரிகளை இனங்காணத் தொடங்கிவிடும் என அச்சுறுத்துகிறது வாழ்வியல்.

மேலை நாட்டின் இன்றைய ஆய்வுகள் மனஅழுத்தம் (stress) நல்லது என்கிறது. ஏன் தெரியுமா?! மனஅழுத்தம் வரும்போது ஒக்ஸிடோசின் (Oxytocin) என்ற நேர்மறையான சமூக உணர்ச்சிகளை தீவிரப்படுத்தும் ஹோர்மோன் சுரக்கும். இது மற்றவர்களுடன் இயைந்து பழகத் தூண்டும். அப்படி மற்றவர்களுடன் சேர்ந்து பழகும்போது மனஅழுத்தம் குறையும் ஒற்றுமை கூடும் என்கின்றனர். இயற்கை இப்படி இருக்க அதை விட்டும் மனஅழுத்தம் வரும்போது தன்னம்பிக்கையும் சமூக நம்பிக்கையும் இழந்து தனிமைப்படும்போது ஒக்ஸிடோசின் செயல் இழந்து மனஅழுத்தம் அதிகமாகி அதனாலேயே பலருக்கும் மகிழ்ச்சி குறைகிறது என்கிறது மனஇயல்.

மனிதரை 'மனித இனம்' (human race) என்று அழைப்பது ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டு யார் வெற்றி பெறுகின்றார் என்று பார்ப்பதற்கல்ல. ஒருவரை ஒருவர் பகையாளியாகப் பார்க்காமல் நட்போடு கை கோர்த்த எங்கள் உழைப்பே எங்கள் வெற்றியின் மூலகாரணம். இது ஒரு தனி மனித வெற்றி அல்ல எங்கள் அனைவரின் வெற்றி, இணைந்து செயல்படுங்கள் உங்கள் கனவுகள் நனவாகும் என்கிறார் ஐரோப்பிய சாதனையாளர் ரிச்சர்ட் பிரான்ஸன்.

வாழ்வின் அன்றாட செயல்களில் இயைந்து இருக்க வேண்டிய மனித நேய உணர்வு பல நேரம் போட்டி மனப்பான்மையால் நீர்த்துப் போய் பேரிடர் காலங்களில் மட்டும் சட்டென்று வெளிப்படும் உடனடி (instant) இரக்கமாக சுருங்கிப் போயிருக்கிறது. நீறுபூத்த நெருப்பாக அமிழ்ந்திருக்கும் மனிதத்தைப் புரிந்து சற்றே அதை நிரவி விட்டால் போதும் ஒரு செம்புக்குள் சுருக்கி வைத்திருக்கும் மனிதம் பொங்கிப் பிரவாகமெடுக்கும் கங்கை வெள்ளமாய் இந்த உலகை நனைத்து விடும்.

ஒருவரின் திறமை என்பது அவருக்கானது மட்டுமல்ல. 'Life is balancing.' உன்னிடம் இருப்பதை நீ கொண்டு வா என்னிடம் இருப்பதை நான் தருகிறேன் என்று ஒருவருக்கொருவர் இணக்கமாகப் பகிர்ந்து கொள்ளும்போது எல்லோருடைய தேவையும் இனிதே நிறைவேறுகிறது. மகிழ்ச்சியும் அங்கு பலமடங்காகிறது. எது வேண்டும் நமக்கு..?!

விளம்பரம் VLAMBARAM™
30 ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

## "பாடி ஆடு பாப்பா" சிறுவர் பாடல் நூலுக்கு விருது

கவிஞர் திரு. சபா. அருள்சுப்பிரமணியம் அவர்கள் எழுதிய சிறுவர் பாடல்களின் தொகுப்பான "பாடி ஆடு பாப்பா" என்னும் சிறுவர் பாடல் நூலுக்கு அமெரிக்காவில் வோஷிங்டன் மேரிலான்டில் உள்ள உலகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் சிறந்த நூலுக்கான விருதை வழங்கியுள்ளது. இதற்கான விருது வழங்கும் நிகழ்வு ஒக்ரோபர் 10ஆம் நாள் குற்றாலத்தில் நடைபெறவுள்ளது. இம்மகிழ்ச்சியான செய்தியைக் கனடாவாழ் தமிழ்ச் சமூகத்திற்கும் அறியத் தருகிறோம்.

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
- Advanced function
- Calculus & vectors
- Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228



# கிராமத்தில் இருந்துதான் உலகம் முழுவதும் உள்ள அலுவலகங்களை இயக்குகிறேன்!

## நேர்காணல் - Zoho CEO ஸ்ரீதர் வேம்பு    நேர்கண்டவர் - கண்ணன்

Working from home, online class, zoom meeting, webinar என உலக நடைமுறைகளை தலைகீழாக மாற்றி வருகிறது, கொரோனா. ஆனால், கொரோனாவுக்கு முன்பிருந்தே, தகவல் தொழில்நுட்ப நிறுவனமான ஸோஹோ நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி ஸ்ரீதர் வேம்பு, தமிழகத்தில் தென்காசிக்கு பக்கமுள்ள மத்தளம்பாறை என்ற ஒரு சிறிய கிராமத்தில் இருந்துதான் பணியாற்றுகிறார். தமிழகத்தின் புதிய பிரபலங்களில் ஒருவர். அவரிடம் பேசினோம்.

**பெரிய நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியான நீங்கள் சென்னை போன்ற அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு நகரத்தை விடுத்து கிராமத்திற்கு இடம்பெயரக் காரணம் என்ன?**

சென்னையில் எங்கள் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அமைந்திருந்தாலும் அங்கு பணி செய்கின்ற 80 சதவீதத்திற்கும் மேலான ஊழியர்கள் தமிழகத்தின் பிற மாவட்டங்களை சேர்ந்தோர்தான். பணி நிமித்தமாக சென்னை, பெங்களூரு மாதிரியான மெட்ரோ நகரங்களுக்குப் இடம்பெயர்ந்து வருவோரால்தான் அதிகளவிலான மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதிகளாக இந்த நகரங்கள் மாறி நிற்கின்றன. அதனால், அந்த நகரத்தின் உள் கட்டமைப்பு வசதிகளில் தொடங்கி அனைத்துமே விமர்சனத்துக்கு உள்ளாகின்றது. ஒப்பீட்டு அளவில் பார்த்தால் மற்ற துறை சார்ந்த நிறுவனங்களை காட்டிலும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்கு மிக அதிகம். அதுதான் 'எதற்காக எல்லோரையும் ஒரே நகருக்குள் சேர்க்க வேண்டும்' என எங்களை யோசிக்கத் தூண்டியது.

இந்த யோசனை பத்து ஆண்டுகளுக்கு முன்னர் வந்தது. அதற்கு செயல் வடிவம் கொடுக்கும் முயற்சியாக அப்போதைய நெல்லை மாவட்ட பகுதியான தென்காசியிலிருந்து பதினைந்து கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள மத்தளம்பாறை கிரமத்தில் எங்கள் நிறுவனத்தின் ஊரக பகுதி கிளை அலுவலகத்தை 2011இல் சிறிய அளவில் ஆரம்பித்தோம். படிப்படியாக ஊழியர்களை பணிக்கு அமர்த்தி தற்போது சுமார் 450க்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலை செய்து வருகின்றனர். இவர்கள் எல்லோருமே தென்காசியிலிருந்து 100 கிலோ மீற்றருக்குள் உள்ள ஊரக பகுதிகளை பூர்வீகமாக கொண்டோர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 'ஸோஹோ டெஸ்க்' இங்கிருந்துதான் தயாரிக்கப்பட்டு உலகம் முழுவதும் பிராண்ட் செய்யப்படுகிறது.




கிராமத்தில் இருக்கும் இந்த அலுவலகத்தின் செயல்பாட்டை முன்னெடுத்து செல்ல என்னால் முடிந்ததை செய்ய வேண்டுமென்ற பொறுப்புணர்வோடு கடந்த செப்ரெம்பர் மாதத்தில் நான் மத்தளம்பாறை கிராமத்திற்கு வந்துவிட்டேன். அதற்கு முன்னர் வரை சென்னை மற்றும் வெளிநாடுகளில் இருந்தபடி தென்காசி அலுவலகத்தை கவனித்து வந்தேன்.

**கிராமத்திலிருந்து உங்களது அலுவல் பணிகளை மேற்கொள்ளும் அனுபவம் எப்படி உள்ளது?**

மிகவும் வித்தியாசமான அனுபவமாக உள்ளது. கிராம வாழ்க்கை எனக்கு புதிதல்ல. நான் பிறந்து வளர்ந்தது கிராமத்தில்தான். படித்து முடித்தவுடன் பணி சூழல் காரணமாக என்னால் கிராம வாழ்க்கைக்குள் மீண்டும் திரும்ப முடியவில்லை. தற்போது மத்தளம்பாறை அலுவலகம் ஒரு மாற்றத்தை கொடுத்துள்ளது. இங்கு தடையற்ற இணைய சேவை, தொலைத்தொடர்பு சேவை, உள்கட்டமைப்பு வசதிகள், சாலை வசதி, மின்சார வசதி, பள்ளிக்கூடம் மற்றும் அருகாமையில் உள்ள தென்காசியில் தரமான மருத்துவமனை, பொழுதுபோக்கத் திரையரங்கம் என அனைத்துமே அற்புதமாக உள்ளன. கூடவே பசுமையான மேற்குத் தொடர்ச்சி மலையின் அழகை ரசித்த படி சுத்தமான காற்றை சுவாசிக்கவும் முடிகிறது. அலுவலகப் பணியாளர்களின் அன்றாட பயணமும் மிக எளிதாக அமைகிறது. ஒரு சில ஊழியர்கள் சைக்கிள் மிதித்தபடி அவர்கள் ஊரில் இருந்து அலுவலகத்திற்கு வந்து செல்ல வாய்ப்புகள் உள்ளன. நானும் 'ஸ்ட்ரெஸ்' இல்லாமல் உற்சாகத்தோடு வேலை செய்து வருகிறேன்.

**கிராமங்களின் வளர்ச்சியில்தான் இந்தியாவின் வளர்ச்சி அடங்கியுள்ளது என முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் சொல்லி இருந்தார். அதை நீங்கள் செய்துகொண்டிருக்கிறீர்கள்?**

கலாம் அய்யாவின் வார்த்தைகளை மெய்ப்பிக்கச் செய்ய வேண்டிய பொறுப்பு நம் ஒவ்வொருவரதும் கையிலும் உள்ளது. கிராமத்தில் அலுவலகங்களை அமைக்கின்ற முயற்சி அதற்கு நிச்சயம் கை கொடுக்கும் என நம்புகிறேன். இந்தியாவில் கொரோனா ஊரடங்கு அமலுக்கு வருவதற்கு முன்னரே மார்ச் மாதத்தின் முற்பாதியிலேயே எங்கள் அலுவலகத்தில் பணியாற்றி வந்த ஊழியர்களை வீட்டில் இருந்து பணியாற்றும்படி சொல்லி விட்டோம். எல்லோரும் அவரவர் சொந்த ஊர்களில் பத்திரமாக வீட்டில் இருந்தபடி அலுவல் பணிகளை மேற்கொள்கின்றனர். இதில் சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் அவர்களது சொந்த ஊரில் இருந்தே பணி செய்ய விரும்புவதாக எங்களிடம் சொல்லியுள்ளனர். இதை அப்படியே பயன்படுத்தி ஸோஹோ நிறுவனத்தின் சார்பில் தமிழகத்தில் உள்ள வெவ்வேறு மாவட்டங்களின் ஊரக பகுதிகளில் சுமார் எட்டுக்கும் மேற்பட்ட அலுவலகங்களை அமைப்பதற்கான திட்டங்களை முடுக்கி விட்டுள்ளோம்.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் மத்தளம்பாறை கிராம அலுவலகத்தை முன் மாதிரியாக வைத்து அலுவலகம் அமைப்போம். அதில் உள்ளூரை சேர்ந்த இளைஞர்களை பணி அமர்த்தவும் முடிவு செய்துள்ளோம். அதன்மூலம் ஊரக பகுதிகளில் உள்ள திறமை வாய்ந்த இளைஞர்களை அடையாளமும் காணுவோம் என்பது எங்கள் இலக்கு. சிலிகான் வேலியில் எழுதப்படுகின்ற சாப்ட்வேர்களை தமிழகத்தின் சிற்றூர்களில் இருந்தும் எழுத முடியும். இந்த அலுவலகங்கள் அனைத்தும் 'அனைவராலும் முடியும்' என்ற நம்பிக்கையை கொடுக்கும் மையங்களாக இருக்கும் என நம்புகிறேன். இதில் சென்னை அலுவலகம் தலைமை அலுவலகமாக இருந்து கிராமங்களில் உள்ள அலுவலகங்களின் செயல் பாட்டினை கவனிக்கும்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்...)


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC
mhc

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி,

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS • TENNIS ELBOW PROBLEM
• SKIN PROBLEM • TREAT WITH MASSAGE THERAP
• RESPIRATORY PROBLEMS • ALLERGIES
• DIGESTIVE PROBLEMS • SEXUAL PROBLEMS
• VARICOSEVEINS • SEXUAL PROBLEMS
• BACK PROBLEM /NECK PROBLEM • CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM


HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stomatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4


TRIDEL
BUILT FOR LIFE
WESTERLY
NEW PROJECT BY TRIDEL
(DUNDAS/ISLINGTON)
Storeys 20
Units 257
Sizes from 502SF to 1120SF
Walk to Islington subway
Get VIP Platinum Access to the Best Units and the Best Pricing
416.321.6969
HomeLife / GTA Realty Inc. Brokerage*
HOMELIFE
HIGHER STANDARDS
5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2
*Independently Owned & Operated


நம்மை நாமே
காத்துக் கொள்வோம்!
முழங்கையால்
மறைத்து
இருமலாம்
உங்கள்
கைகளைக்
கழுவுங்கள்
2 m
எப்போதும் 2மீ
இடைவெளிவிடுங்கள்
உங்கள் முகத்தை
மறைக்கவும்
Québec.ca/coronavirus
1 877 644-4545
Votre gouvernement
Québec

# Gang Leader -திரை விமர்சனம்



ஞா. ஆரணி

ஓர் இரவில் நடக்கும் திருட்டில் 5 ஆண்கள் இறக்கின்றனர். இச் சம்பவத்தினால் பாதிக்கப்படும் ஐந்து பெண்களைப் பற்றியதுதான் 2019இல் வெளியான இந்தத் தெலுங்கு மொழிப் படத்தின் கதை.



சின்னப் பிள்ளையிலிருந்து வயது முதிர்ந்தோர்வரை என ஐந்து பெண் கதாபாத்திரங்கள் இந்தப் படத்தில் இருக்கின்றனர். இவர்கள் ஐவரும் சேர்ந்து தங்களது ஆண் உறவினர்களைக் கொன்றவரைக் கண்டுபிடிக்க வேண்டும் எனத் தீர்மானிக்கின்றனர். இதற்காக 'Pencil' என்ற ஒரு துப்பறியும் நாவல் எழுத்தாளரைத் தேடிச் செல்கின்றனர்.

Pencil ஓர் உண்மையான எழுத்தாளர் இல்லை. அவர் ஆங்கிலப் படங்களைப் பார்த்துவிட்டு அவற்றின் கதைகளை மொழி பெயர்த்து எழுதும் போலி எழுத்தாளர். அப்படியிருந்தும் Pencil இந்தப் பெண்களது கதையை வைத்து ஒரு புத்தகம் எழுதலாம் என நினைத்து அவர்களுக்கு உதவி செய்யச் சம்மதிக்கிறார்.

கொலைகாரனை இவர்கள் தேடிக் கண்டுபிடித்தார்களா என இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.

படத்தின் கதையைவிட இதில் வரும் கதாபாத்திரங்களும் அவர்களது உறவும், இவற்றில் வரும் நகைச்சுவைகளும் நன்றாக இருக்கின்றன. குறிப்பாக பெண்களில் மூத்தவராக இருக்கும் சரஸ்வதியாக நடிக்கும் லட்சுமி சிறப்பாக நடித்துள்ளார். கதையின் முக்கிய கதாபாத்திரமாகவும் இவர் அமைகிறார். ஆனால் ஒவ்வொரு கதாபாத்திரமும் கதாநாயகனான Pencil உடன் உறவுமுறை ஏற்படுத்துவதால் படம் நன்றாகச் செல்லுகிறது. தனிமையில் வாழ்ந்த இவர்கள் ஒரு குடும்பம் போல வாழத் தொடங்குகின்றனர்.

பெண் கதாபாத்திரங்கள் இந்தக் கதையிலும், திரையிலும் இருந்தாலும் சரஸ்வதியைவிட வேறொருவருக்கும் கதையில் முக்கியத்துவம் இல்லை. கதாநாயகனுக்கு தாய், தங்கை, காதலி, மகள் என்ற உறவுகளை நிரப்புவதற்காகவே மற்ற நான்கு பெண்களும் இருக்கின்றனர். ஆனாலும் இவ்வாறு பல பெண் கதாபாத்திரங்கள் இருந்தது இப்படத்திற்கு நன்றாக இருந்தது. இத்தோடு கதாநாயகனுக்கும் நடைபெற்ற திருட்டுக்கும் எதிர்பாராத தொடர்பு இருந்தது நன்றாக இருந்தது.

படத்தில் ஒரு முக்கியமான கருத்தாக முதியோரை மதித்தல் அமைகிறது. லட்சுமி அவமதிக்கப்பட்டதும், முதியோரை மதிக்காததும், அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது என்ற நினைப்பும் இக்கதையை நகர்த்துகிறது. கதையின் முடிவு இவை தவறு எனச் சிறப்பாகக் காட்டுகிறது.

இக்கருத்திற்கும், நகைச்சுவைக்கும், நடிப்பிற்கும் இப்படம் அனைவரும் பார்க்கக்கூடிய படமாக அமைகிறது.

# கனடிய...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

ஜனநாயகக் கட்சியின் தேசிய இயக்குனர் Anne McGrath தாங்கள் ஏற்கனவே தாக்கல் செய்த வேட்பாளரை போட்டியில் இருந்து விலகுமாறு கேட்க மாட்டோம்



என்றார். அத்துடன் புதிய ஜனநாயகக் கட்சி ஒருபோதும் பசுமைக் கட்சியிடம் Jagmeet Singh இற்கு எதிராக வேட்பாளரை நிறுத்த வேண்டாம் எனக் கேட்கவில்லை என்றார்.

2020 ஒக்ரோபர் 26இல் ரொறொன்ரோ மத்தி, யோர்க் மத்தி ஆகிய இரண்டு முன்னாள் லிபரல் கட்சி உறுப்பினர்களைக் கொண்ட தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. அதில் ரொறொன்ரோ மத்தி தொகுதியில் அனாமி போல் பசுமைக் கட்சியின் சார்பிலும், CTV ஊடகவியலாளரான Marci len என்ற கறுப்பினப் பெண் லிபரல் கட்சியின் சார்பிலும் போட்டியிடுகின்றனர். இத்தொகுதியில் பழமைவாதக் கட்சியின் சார்பில் Benjamin Gauri Sharma போட்டியிடுகிறார். புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் Brian Chang போட்டியிடுகிறார். இவர்கள் நால்வரையும் தவிர இன்னும் ஐந்து பேர் ரொறொன்ரோ மத்தி தொகுதிக்கான இடைத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இத்தொகுதியில் வெற்றி பெறாவிட்டால் பசுமைக் கட்சியின் சார்பில் தான் எந்தத் தொகுதியிலாதல் போட்டியிடத் தயாராக உள்ளதாக அனாமி போல் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். அத்துடன் ரொறொன்ரோ மத்தி தனது சொந்தத் தொகுதி எனவும், இங்கு தான் வாழ்ந்து வருவதாகவும், இங்கு தனது தாய் கடந்த 30 வருடங்களாக ஆசிரியராக இருந்தார் எனவும், இங்குதான் தனது பேத்தியார் மருத்துவத் தாதியருக்கு உதவியாளராக இருந்தார் எனவும் பெருமையுடன் கூறும் அனாமி போல் தனது தொகுதி மக்கள் தன்னை இம்முறை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்வர் என நம்பிக்கை தெரிவித்தார்.



Math tutorial 419

Answers to tutorial 418

1)Given the points A(2 ,3 ,-2 ) AND b(4 ,-1 ,5 ) THE MID POINT OF ab is M(3 ,1 ,3/2 ).The line passes through the point C(0 ,-1 , 1) and M , therefore a direction is CM = (3,2,1/2)

Using direction vector ( 6 ,4 ,1) and the point C (0 ,-1 ,1 )

(x ,y, z )=(0 ,-1 ,1 ) +t (6 ,4 ,1 )

The parametric equation is

X =6t ,y = -1+4t ,z =1+t

2)Given the line 10x+4y -101 = 0 and a point A(3 ,-4 ).A normal to the line is $\vec{n}$ =(5 ,2 ) which is a direction for a line perpendicular to 10x+4y -101 =0A vector perpendicular to $\vec{n}$ is (2 ,-5 ) The equation of the line perpendicular to 10x+4y -101=0 and passing through (3 ,-4 ) is

(2 ,-5 )(x-3, y+4 ) =0

2x -5y -26 = 0, now solving this and 10x +4y -101 =0

The point of intersection is (21/2 ,-1)

Tutorial 419

Questions

1)Show that the lines $\vec{r}$ =(4 ,7 ,-1 ) +t(4 ,8 ,-1 )and $\vec{r}$ = (1 ,5 ,4 )+u (-1 ,2 ,3 ) intersects at right angles and find the point of intersection

2)Find the scalar equation of the straight line with normal (-6 ,4) that passes through the point (-3 ,-7 )

3)Find the slope of the tangent to f(x) =$\sqrt{x}$ at x =9

4)Determine the equation of the member of the family that has zeros at x = -1 , x = 4 and passes through the point (5 ,9 )

5)State whether each function has an even or odd number of turning points

a)$f(x) = 22x^4-4x^3+3x^2 -2x +2$

b)$f(x) =-x^5+x^4 -x^3 +x^2 -x +1$

By Mr S.F Xavier (Teacher)6473409490/4167322228

# இலங்கை...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

இலங்கையில் கொரோனா எச்சரிக்கைகளை மக்கள் மீறி நடந்து கொண்டனரா? அல்லது அரசாங்கமும் அதனை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லையா? என்கின்ற கேள்விகள் எழுகின்றன. பொதுமக்கள் கொரோனா நடைமுறைகளை சிறிது சிறிதாகத் தளர்த்திக்கொண்டமை உண்மை தான். அதேவேளையில் அரசாங்க நடைமுறைகளும் அது சார்ந்த நிறுவனங்களால் மீறப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு பொதுப்போக்குவரத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குமுறைகள் தொடர்ந்து இடம்பெறவில்லை. அரச நிறுவனங்களிலும் ஆரம்பத்திலிருந்த சுகாதார நடைமுறைகள் இல்லாமல் போயின.

மினுவங்கொடையிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் கொரோனாவின் இரண்டாம் அலை ஆரம்பித்திருக்கின்றது. அவ்வாறாயின் அத்தொழிற்சாலைக்குள் அது எவ்வாறு உள்நுழைந்தது? இந்திய மக்கள் சிலர் அத்தொழிற்சாலைக்கு வந்ததாகவும் அவர்களின் மூலமாகவே தொற்று பரவியிருக்கலாம் எனவும் சில குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் அவ்வாறு எவரும் வரவில்லை என் அத்தொழிற்சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வெளியார் வருகை தொடர்பில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது மிக அவசியமானதாகும்.

அயல் நாடான இந்தியாவில்- குறிப்பாக தமிழகத்திலும் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகின்றது. உலகில் கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ள நாடுகளில் தற்போது முதலாவது இடத்தில் இருப்பது அமெரிக்காவாகும். இரண்டாவது இடத்தில் இந்தியாவே இருக்கின்றது.



இந்த நிலையில் இந்தியர்களின் வருகை மற்றும் கடல் மார்க்கமாக அவர்களால் மேற்கொள்ளப்படும் ஊடுருவல்கள் தொடர்பில் மிக அவதானமாக இருக்க வேண்டும். சட்டவிரோதமாகப் படகுகளில் நாட்டிற்குள் வருவோர், அத்துமீறி இலங்கை கடற்பரப்பிற்குள் நுழையும் இந்திய மீனவர்கள், கேரள கஞ்சா போன்ற போதைப்பொருட்களை இலங்கைக்குள் கடல்மார்க்கமாகக் கடத்துவோர் அவர்களுடன் தொடர்பு கொள்ளும் உள்நாட்டவர்கள் என அனைவரும் கண்காணிக்கப்பட வேண்டியவர்கள்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரவலை சமூகப் பரவல் என்று ஏற்றுக்கொள்ள அரசாங்கத் தரப்பினர் தயங்குவதாகவே தெரிகின்றது. இது கொத்தணிப் பரவல் அதாவது குறித்த ஆடைத் தொழிற்சாலை தொடர்பில் ஏற்பட்ட கொத்தணிப் பரவல் என்றே குறிப்பிடப்படுகின்றது. ஆனால், சமூகப் பரவலாகவே இது இன்று ஆக்கிரமித்து வருகின்றது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

# கிராமத்தில்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

**பணி நேரம் போக மீதமுள்ள நேரங்களில் என்ன செய்கிறீர்கள்? உங்களது தினசரி பணி திட்டங்கள் குறித்து கூறுங்களேன்?**

உலகம் முழுவதும் வெவ்வேறு நாடுகளில் ஸோஹோ அலுவலகங்கள் இயங்கி வருவதால் அதிகாலை மூன்று மணிக்கெல்லாம் எனது நாள் ஆரம்பித்து விடும். அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் என ஒவ்வொரு நாட்டு அலுவலக ஊழியர்களோடும் அவர்களது பணி நேரத்தில் அலுவல் சார்ந்து கலந்துரையாடுவேன். அதை முடித்த பின்னர் ஓய்வு நேரம் இருந்தால் கிரிக்கெட் விளையாடுவேன்.

இவை போக எனக்கு தெரிந்த சாப்ட்வேர் தொழில்நுட்பத்தை இங்கிருக்கும் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கிறேன். சைக்கிளில் பயணம் செய்வேன். கொரோனா ஊரடங்கிற்கு முன்னர் வரை குற்றால அருவிகளுக்கு செல்வது மற்றும் இங்கிருக்கும் சுற்றுலா தலங்களுக்குச் செல்வதையும் வாடிக்கையாகக் கொண்டிருந்தேன்.

**உங்கள் பூர்வீக பின்னணி?**

காவிரி கரையோரம் உள்ள தஞ்சாவூர் மாவட்டத்தின் உமையாள்புரம் கிராமத்தில்தான் நான் பிறந்தேன். என் அம்மாவின் பூர்வீக கிராமம் அது. கொள்ளிடக் கரையோரம் உள்ள திருப்பனந்தாள் அணைக்கரை பகுதி கிராமமான சிதம்பரநாதபுரம் கிராமம்தான் என சொந்த ஊர்.

**மாளிகையோ குடிசையோ எங்கே வாழ்கிறோம் என்பதல்ல வாழ்க்கை, நாம் எங்கே மகிழ்ச்சியாக வாழ்கிறோம் என்பதுதான் வாழ்க்கை.**

சென்னை - மேற்கு மாம்பலம் அஞ்சுகம் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்றேன். பின்னர் பன்னிரண்டாம் வகுப்பு வரை கிழக்கு தாம்பரத்தில் உள்ள ஜெய்கோபால் கரோடியா நேஷனல் மேல்நிலைப்



பள்ளியில் பயின்றேன். மெட்ராஸ் ஐஐடியில் பொறியியல் முடித்து அமெரிக்காவில் உள்ள பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆராய்ச்சியை நிறைவு செய்தேன். இரண்டு ஆண்டுகள் க்வால்காம் நிறுவனத்தில் பணிசெய்த பின்னர் 1996 இல் ஸோஹோ நிறுவனத்தை நிறுவினேன்

**கிராமப்புற மக்களின் வளர்ச்சிக்கான திட்டங்களை ஏதேனும் கொண்டுள்ளீர்களா?**

கிராமங்களில் இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை ஸோஹோ மேற்கொண்டு வருகிறது. மத்தளம்பாறை கிராம அலுவலகத்தில் உள்ளூரைச் சேர்ந்த இளைஞர்களுக்கு எங்களது ஊழியர்கள் திறன் மேம்பாடு சார்ந்த பயிற்சிகளை கொடுத்து வருகின்றனர். வழக்கமாக கார்ப்பரேட் நிறுவனங்கள் செய்கின்ற முயற்சி தான் இது என்றாலும் இதன் பலன் எல்லோருக்கும் சாதகமாக இருக்கும் என நம்புகிறேன். ஏனென்றால் பயிற்சி கொடுக்கும் ஊழியரும், பயிற்சி பெரும் இளைஞரும் ஒரே ஊரோ அல்லது அக்கம் பக்கத்து கிராமங்களை சேர்ந்தவர்களாக தான் இருப்பர். அதனால், ஊர் பாசத்தினால் அக்கறையோடு ஊழியரும் அந்த இளைஞருக்கு தனக்கு தெரிந்த அனைத்தையும் ஆழமான ஈடுபாட்டோடு சொல்லிக் கொடுப்பார். அதன்மூலம் அந்த இளைஞர்களின் திறனும் மெருகேறும்.

**'சுயசார்பு இந்தியா' திட்டம் குறித்து பிரதமர் மோடி பேசி வருகிறார். அது நாட்டின் பொருளாதரத்தை மீட்டெடுக்க எந்தளவுக்கு கைகொடுக்கும் என நம்புகிறீர்கள்?**

நிறைய இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முன்னோடி திட்டமாக சுயசார்பு திட்டம் இருக்கும் என நம்புகிறேன். நாம் பயன்படுத்துகின்ற பெரும்பாலான பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுபவைதான். இப்படி ஒரு பக்கம் அனைத்தையும் இறக்குமதி செய்து கொண்டே இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பில்லை எனச் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். இது இரண்டுமே ஒரு நாணயத்தின் இரு பக்கத்தைப் போலத் தான். இதற்கு தீர்வு காண வேண்டுமென்றால் 'மேக் இன் இந்தியா' திட்டத்தை மேம்படுத்தி 'டிசைன் இன் இந்தியா' என மாற்ற வேண்டும். இதன் மூலம் அனைத்தையும் இங்கேயே உற்பத்தி செய்கின்ற நிலைக்கு நாம் முன்னேறலாம். செல்போனின் மதர் போர்டில் ஆரம்பித்து போர் கருவி, இயந்திரங்கள் என அனைத்தும் நமக்கு நாமே பாணியில் உருவாக்குவதற்கான வாய்ப்புகள் உருவாக வேண்டும். அது தொழில்நுட்ப ரீதியாக நாம் பிற நாடுகளை சார்ந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தைத் தவிர்க்கவும் பெரிதும் உதவலாம்.

# சக்தி விழா

முச்சக்தி யாய்விளங்கும் முப்பெருந் தேவியர்க்கு
இச்சையுடன் செய்கின்ற இன்பவிழா ஈர்ப்பிதனை
துச்சமெனக் கொள்வோர்தான் தீவினைக் காளாவர்
அச்சமே வேண்டாம் அமைதியையே மேற்கொள்வீர்.

முச்சக்தி யானாலும் மூவருமே ஒருவரேதான்
அச்சமிலாச் சக்தியவள் ஆளுமை கொண்டவளே
இச்சையுடன் சிவனாரை இறுகப் பிடித்தவளோ
கச்சிதமாய் ஆட்டுகின்றாள் காலங் கருதியே.

ஆடாமல் அசையாமல் ஆளுடையான் இருக்கையிலே
தேடியே சென்றவனை செப்பமுற ஆட்டுகின்றாள்
ஆடா திருந்தாலோ அசையா திவ்வுலகே
ஈடேற்றம் வேண்டுமென்றால் இணைவாமே சிவசக்தி.

சக்தியின்றேல் சிவமில்லை சந்ததியும் ஏதுமில்லை
திக்கெல்லாம் சென்றுபார் சிவசக்தி சீர்பயனை
சக்தியின் செயலின்றேல் சிவனார்தான் என்செய்வார்
எக்கரும ம் வேண்டிடினும் ஏற்றிடுவீர் சக்தியினை.

வீரசக்தி துர்க்கையென்பாள் வெற்றிக்கு வித்தவளே
சீரமைக்கும் தன்மையவள் சிந்தனைக் குரியவளே
வீரத் திருமகளை வேட்பாக வேண்டினர்க்கு
ஆரமுதாம் வெற்றியுடன் ஆளுமையும் சேர்ந்திடுமே.

கல்விக் கதிபதியாம் கமலத்து நாயகியே
செல்லும் இடமெல்லாம் சீராக வாழ்வதற்கு



கல்வியே மூலதனம் கசடறக் கற்றவர்க்கு
செல்வத்துட் செல்வம் சீரான கல்வியதே.

இல்லற வாழ்வுக்கு இன்பஞ்சேர் செல்வமதே
நல்வழியில் சேர்ந்தசெல்வம் நன்றாக உதவிடுமே
அல்வழியில் வந்தவற்றை அறிவுடையோர் ஏற்காரே
இல்லார்க்குக் கொடுத்தின்பங் காண்பாரே இறையன்பர்.

பலபெயரில் தெய்வங்கள் பார்வைக்கு இருந்தாலும்
பலமுடைச் சக்தியாய்ப் பாசமூட்டும் பார்வதியே
சலமிலன் சங்கரனின் சக்தியாய்த் தோன்றுகின்ற
நலன்தரு நாயகியாம் நம்மையாள் சக்தியவள்.

முருகேசு மயில்வாகனன்

## வாடகைக்கு கொடுப்பவர்களின் கவனத்துக்கு!

வாடகையாளரை நீங்கள் தெரிவு செய்யும்போது குறிப்பிட்ட வாடகையாளரின் தகவல்களைப் பெறுவது, எதிர்காலச் சிக்கல்களை நீக்கும். தகுந்த வாடகையாளரைத் தெரிவு செய்வதற்கு குறிப்பிட்டவரின் முழுத்தகவல்களைப் பெறுவதுடன் அவரைப்பற்றிய தகவல்களை கணினியின் உதவியுடன் உறுதி செய்வதும் நல்லது. அத்துடன் அவரைப்பற்றி அறிந்து கொள்வதற்கான வேறொருவரின் (Personal Reference) தொலைபேசி எண்ணையும் பெற்று வாடகையாளர் பற்றி அறிந்து கொள்ளுங்கள். (வாடிக்கையாளர் பற்றிய தகவலைப் பூர்த்தி செய்வதற்கான பத்திரம் (Rental application form) தேவைப்பட்டால் விளம்பரம் பத்திரிகையுடன் தொடர்புகொள்ளவும்.

## BASEMENT FOR RENT

**MCCOWAN & DENISON**
2 Bedroom Bsmt for rent. Sep. entrance 1 bathroom Sep. washer and Dryer. Close to all facilities.
**647-680-3167/ 905-294-8316**

**NEILSON & MCLEVIN**
1 Bedrooms Bsmt for Rent. Sep. Entrance. No pets or no smoke. Close to 401,mall, ttc @door uft, centaial, quiet area.
**416.834.1081/kugancanada@yahoo.com**

**MORNINGSIDE & FINCH**
1 bedroom bsmt for rent. Sep. Entrance, 1 parking. Close to all facilities. Couples preferred. Avail. immediately.
**647.334.0072 / 416.267.0072**

**BELLAMY & LAWRENCE**
2 Bedroom for rent. Sep. entrance, 1 parking. Most facilities are provided. Avail. November 01, 2020.
**416-464 - 4207/416-431-6349**

**MARKHAM & STEELES**
3 bedroom bsmt for rent. Sep.entrance, laundry, utilities.Close to bus, bank,store. Avail. November 01, 2020.
**647.772.5546 / 647.856.9907**

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom 1 Washroom bsmt for rent. Laundry & Parking. Close to YRT/TTC, shops & schools Avail. beginning of November
**(416) 648-1987 or (416) 669-3549**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking. Close to all facilities. Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416-613-1792**

**MIDDLEFIELD & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking. Close to all facilities. Avail. November 01, 2020.
தொடர்புகளுக்கு: **647.296.7932**

**BELLAMY & LAWRENCE**
3 bedroom Basement for rent. Sep. entrance, car parking, laundry, Internet. Close to all facilities. Avail. Immediately.
**647.920.3019 / 647.781.3019**

**MIDDLEFIELD & FINCH**
2 Bedrooms renovated Bsmt for Rent. Sep. entrance, sep. laundry. Close to all facilities. Avail. October 15, 2020.
தொடர்புகளுக்கு : **647-449-7440**

## BASEMENT FOR RENT

**SCAR. GOLF CLUB & ELLESMERE**
2 Rooms Basement Separate entrance, Shared Laundry Room, access to WIFI Reference will be required. Avail. Nov. 01 2020.
**Text after 4 pm only 647.285.4735**

**LIVERPOOL & FINCH PICKERING**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. 1 parking. Rent $1,100 utilities included. Avail. immediately.
**Call Nathan 416-557-0638,**

**NEILSON ROAD & FINCH AVE.EAST**
1 Bedroom Basement for Rent. Sep. entrance, utilities. No smoking. Single person preferred. Avail. December 01, 2020.
தொடர்புகளுக்கு: **416-835-0273**

**MARKHAM & PAINTED POST**
1 Bedroom+1 washroom bsmt for rent. Sept. Entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.434.0082**

**MORNING SIDE & STAINES**
2 Bedroom bsmt for rent. Walkout Sep.entrance, laundry. Close to transit & all facilities. Avail. November 01, 2020.
தொடர்புகளுக்கு: **416.880.4350**

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep.entrance. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **647.706.2316**

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.879.9603 / 647.295.9956**

**MCCOWAN & BRIMORTON**
Newly renovated 1 Bedroom bsmt with sep.entrance, Rent: $1200+ 40% Utilities. Suitable for a couple or single occupancy.
**Contact: Jude (416.884.0513)**

**MARKHAM & DENISON**
2 bedroom new bsmt for rent. Sep entrance.1 Parking. Ladies or couple preferred. No pets or no smoke.
தொடர்புகளுக்கு: **416.826.8811**

**ELLESMERE & ORTON PARK**
2 Bedroom Basement for rent. Sep. entrance.Parking, Washroom, Kitchen. No Pets. Available Immediately!
**Call: 647.998.0181 / 905.471.2444**

மேலும் பக்கங்கள் 15, 16

## BASEMENT FOR RENT

**KENNEDY & EGLINTON**
2 bed room Basement apartment for rent. Walk to Subway. Available immediately.
தொடர்புகளுக்கு: **416-833-7729**

**MARKHAM & STEELES**
1 Bedroom new bsmt for rent. Sep.entrance, parking. Female student or family preferred. Close to Bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.829.3212**

**MARKHAM & MCNICOLL**
2 bedroom bsmt for rent. 1.5 washrooms, Sep.entrance, 1parking. Close to all facilities. No pets no smoking. Avail. Immediately.
**Call or text: 647.688.1910.**

**MARKHAM & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, Rent $1400. Close to all facilities.
**Rekanikson@gmail.com**
**Cell 647.887.7072**

**MARKHAM & SHEPPARD**
3 Bedrooms & 2 full washrooms bsmt for rent. Rent $1800+50% utilities. No smoke, no Alcohol & no pets. Avail. immediately.
**647.855.2148 / 437.985.6101**

**MARKHAM & STEELES**
3-bedroom newly renovated bsmt for rent. Students are welcome. Avail. immediately.
**647.505.2582 / 905.471.2582**

**MORNINGSIDE & MCNICOLL**
2-bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Couple couple preferred
தொடர்புகளுக்கு: **416-258.3256**

**MORNINGSIDE & MCLEVIN**
2 bedroom bsmt for rent. Parking, laundry. Close hwy 401, TTC & all facilities.
**416- 875-1211 / 416- 720-4472**

**16TH AVENUE & 9TH LINE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking, Laundry. Rent $1,450 +utilities. Close to all facilities. Avail. November 01, 2020. **416.618.3660 / 647.367.0220**

**MCCOWAN & ELLESMERE**
Newly renovated 1 Bedroom bsmt for rent. Sep. entrance, include kitchen & washroom & separate laundry
தொடர்புகளுக்கு: **416-738-9165**

**NEILSON& MCLEVIN**
2 Bedrooms Bsmt for Rent. Sep. entrance, Parking Included, Close to TTC, Mall and all Facilities.
தொடர்புகளுக்கு:**647.773.7086**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2bedrooms Bsmt for rent. Sep.entrance1 washroom, full kitchen, living room.1 car parking Space, laundry (Preference couples or two working females)
**905-599-1622/416.357.1252**

## ROOM FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
1 room available in 2 Bedroom Bsmt. Close to bus route. No parking space. Looking for single Working male only.
**(416)502-3048 / (416)409-5286**

**NEILSON & MCLEVIN AVE.**
1 Master Bedroom for rent. Near all amenities. Couple Preferred. Avail. immediately.
Please call **Sri : 647.534.5617.**

**WARDEN & FINCH**
1 Room for rent in house upper level. Rent $575. Close to mall & all facilities. No Parking & No Smoker. Avail.Immediately.
**Contact: 647-964-7832**

**WARDEN & FINCH**
Warden and finch near in basement one room for rent (sharing) ready Immediately. Any questions pls. call me **416. 704 .4444**

**MORNINGSIDE & STAINES**
1 bedroom for rent in a basement. Shared. Female only. Sep. laundry, sep. entrance, 2 parking. No smoking & No pets. **Contact : 416.388.2794**

**MIDDLEFIELD HIGHGLEN AVENUE**
சந்திப்புக்கு அருகாமையில் வீட்டின் மேல் தளத்தில் இரண்டு அறைகள் வாடகைக்கு உண்டு. பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு **: 647.389.7120**

**MARKHAM & STEELES**
1 Room with washroom for rent in a basement. Sep. entrance. No car parking. Close to amazon company. Avail. immediately.
தொடர்புகளுக்கு **: 647-761-8270**

**BRIMLEY & LAWRENCE**
1 Room for rent. Sep. entrance, laundry. Close to S.P. Importers, ect. Avail. immediately.
**416.299.4852 / 647.533.9930**

**MIDDLEFIELD & DENISON**
2 rooms for rent. Laundry and Parking included. Close to YRT/TTC, shops and schools. Available beginning of November.
**(416) 648-1987 or (416) 669-3549**

**MORNINGSIDE & LAWRENCE**
1 Bedroom for rent. Sep.entrance, internet. Single or couple preferred. Close to U of T & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.206.3436**

**WARDEN & ELLESEMERE**
Room for rent. Close to all facilities. Male preferred. Avail. immediately.
**416.274.5306 / 437.233.4848**

**MARKHAM & EGLINTON**
Room for rent in an apartment. Close to all facilities. Students or working women only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.566.1918**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## CONDO FOR RENT

**MARKHAM & LAWRENCE**
2 Bedrooms 2 Story Condo. for Rent. Laundry, GYM, Swimming pool. No pets or no smoking. Available immediately.
தொடர்புகளுக்கு: **416-573-7275**

## HOUSE FOR RENT

**BELLAMY & LAWREMCE**
3 bedrooms bungalow house for rent. Parking. Close to all facilities. Avail. November 01, 2020.
**416.671.0085 / 647.960.6427**

**9Th LANE & 14Th AVENUE (MARKHAM)**
4 bedrooms+3 washrooms house for rent. No pets, No smoking. Rent $ 2,290. Close to all facilities. Avail. immediately.
**416-918-9848 / 416-857-7603**

**MARKHAM & ELLESMERE**
3 bedroom Mainfloor house for rent. Parking, kitchen, Wahsroom No Pets. Available Immediately!
**Call 647.998.0181 / 905.471.2444**

**MARKHAM & DENISON**
3 bedrooms and 3 washrooms house for rent. 2 parking available. Close to Shopping malls, TTC and YRT.
தொடர்புகளுக்கு: **416.879.9603**

